திராவிடநாடு

21—10—62 | வார வெளியீடு | விலை 16 காசு

விடிவெள்ளி

கவிஞர் "சுரா"

மங்கையரே! காளையரே! வாரீர்!; புகழ்
மங்காத திராவிடத்தை மீட்க வாரீர்!
முந்தியிருந்த பெருமைதனைப் பாரீர்! இகழ்
குந்தியுள்ள சிறுமையின்று காணீர்!
தந்தியறுந்த வீணையாக்கப்பட்டார்; தமிழர்
நொந்துபட்டார்! வேதனையை நீக்கிடுவீர்!
தந்துவிட்டார் கொடுமையெலாம்; அடிமை
'நந்தி'மேலும் ஆளுவதோ? மாற்ற வாரீர்!

தம்பியரே! தங்கையரே! வாரீர்!; புகழ்
ஓம்பியுள்ள திராவிடத்தைக் கேட்க வாரீர்!
வீடு சிறைக் கூடாம்! விழிநீர்துடைப்பீர்; வடவர்
கேடு களைந்திடக் கிளர்ந்தெழுவீர்!; கழகப்
பீடு நடையில் பங்குபெற்று; வெற்றி
தேடிடுவீர்! விரும்பிடும் திராவிடத்தில்; விடுதலை
விடிவெள்ளி அரும்பிட விரதமேற்ப்பீர்!

உன்னையே நீ எண்ணிப்பார்!

"சமுதாயத்தின் கைகளைத் துண்டித்துவிட்டேன்! எத்தனையோ குடிகளின் எண்ணங்களைச்செம்மையாக்கிவிட்டேன்! இதயமெல்லாம் நிரம்பி வழியும் துன்பம் நீக்கி, இன்ப வெளியின் திருப்பத்தில் அடி வைத்துவிட்டது!" இவ்வாறு உரக்கக் கூவினுன் அந்த உலகத்தின் நோயாளி.

"ஆகா...! என்ன அற்புதமான மகிழ்ச்சி வெறி! என்னப்பா, இந்த அளவுக்கு என்றுமிலா ஆனந்தக் கொண்டாட்டம்" தெளிவான குரலாய் ஒன்று அவனைக்கேட்டது.

"ஆம்; ஏழைகள் வாழ்வில் இன்பம் என்ருல், எள்ளி நகையாடும் உலகம். ஏழைகள் தங்கள் முயற்சியில் படிப்படியாக முன்னேறிச் சீர் பெற்ருல் எங்கிருந்தும் பொல்லாப்பும், பொருமையும் வந்துமாய்க்கும். ஏன் எங்கள் வாழ்வில் இன்பம் பெறுவது கிடைக்காத ஒன்ரு?" அந்தப் பரிதாபத்திற்குரியவன் கேட்டான்.

"அடடா...! பயித்தியமே! நான் உன் நலம் விரும்பி. என்னைப்புரிந்து கொள்ளாமல் எதையெல்லாமோ பேசுகிருய். இவ்வளவு வார்த்தைகளையும் என் செவியால் உணர வைத்து, அதற்குப்பதில் தரவும் வைத்துவிட்டாயே! நான் மிகவும் பரிதாபப்படுகிறேன்" அந்தப் புதிய குரல் மீண்டும் கேட்டது.

"என் நண்பனைப்போலவே பேசுகிருய்" அவன் சொன்னுன்,

"உன்வாழ்வில் ஏற்பட்ட திருப்பம் என்னப்பா" அக்குரல் பேசியது.

"சமுதாயம் என்பவன் என் எதிரி"

"அவனை......"

"அவனது கைகளில் ஒன்றை வெட்டி எடுத்துவிட்டேன்"

"இதுதான் உன் வாழ்வின் திருப்பமா!"

"இப்பொழுதுதான் என்மனம் குளிர்ந்தது."

"இதெல்லாம் திருப்பம் ஏற்படுத்தும் செய்கையா? பகுத்தறிவில் இப்படிப்பட்ட செய்கைக்கு இடம் இல்லையே. உன்னை நீ பார்! நீவந்த வழிப் பாதையைப் பார்! மிகத்தெளிவான

> வாழ்க்கையில் மிருதியாக
> பாதிக்கப்பட்டவனின்
> நெஞ்சம் படும்பாடு!
> நினைவின் அலைவு! நோக்குக!

பாதையில் இதுவரை வந்தாய். இப்பொழுதுதான் இனம்புரியாத பாதைக்கு வழிசெய்துகொண்டாய். நன்மையான திருப்பம் இது அல்ல" அக்குரல் பேசியது.

"ஐயோ நண்பா! இவ்வளவு வார்த்தைகளையும் பேசி வீணே உன்னை அலட்சியத்திற்குப் பலியாக்கிக்கொண்டாய். பரவாயில்லை.

மரு. பாண்டியன்

கைதுண்டித்தவன் ஓர் முட்டாள்! அவனைக் கொன்ருல்கூடச் சமுதாயத்துக்கு நட்டம் இல்லை. அது உனக்குத் தெரியாது!"

"அவன் முட்டாளா?"

"ஆம்! படுமுட்டாள்! பயித்தியம் கூட"

"ஐயோ பயித்தியமே, நீ போய் அவனை வெட்டினுயே, உன் அறிவின் தரம் குறைந்துவிட்டதே!"

"இதெற்கெலாம் கவலைகொள்பவன் அல்லன். அவனைத் தொலைத்துவிட்டால் போதுமென் எத்தனையோபேர் மகிழ்ச்சி தெரிவிக்கக் காத்திருக்கிருர்கள்"

"அவர்கள் யாரோ?"

"இந்த ஊர்க்குடிகள்தான்"

"உன்னைப் பயித்தியக்காரனுக்கி விட்டார்கள். நீயும் பயித்தியத்தின் செயலைச் செய்துவிட்டாய் பாவம்."

"இதுவா பயித்தியக்காரத் தனம்?"

"நிச்சயமாக!"

"சுயநலவாதியைக் குறைவுபடுத்தியது குற்றமா?"

"யார் சுயநலவாதி?"

"அவன்தான்; சமுதாயம்!"

"நீயும் சுயநல ஆசையினுல் தானே அவனைக் குறைவுபடுத்தினுய். உன் சுயநலம் அவனுடையதைவிடப் பெரிதுதான். அவன் சுயநலத்தால் நீ பாதிக்கப்பட்டாயா! எப்படி?"

"அதை நான் எப்படிச் சொல்வேன்"

"சொல்லமாட்டாயா?"

"சொல்ல நான் வெட்கப்படுகிறேன்"

"உன் சுயரூபம் இப்பொழுது தெரிகிறது. சுயநல ஆசைகொண்டாய்; வெறிகொண்டாய்; அவனுடைய லைக் குறைபண்ணினுய். நீ செய்த

(4-ம் பக்கம் பார்க்க)

தங்கத்திற்குப் பங்கம்

21] ஆண்டு சந்தா ரூ. 8 (21—10—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 8

கருநாடக மாநில அரசாங்க நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் கோலார் தங்கவயல் சுரங்கம் நவம்பர் மாதம் முதல் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இயங்கும் என்ற செய்தி, மாநில அரசாங்கம் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்டவர்கள் அனைவருக்கும் வேதனை அளிக்கக் கூடியதாகும்.

கோலார் தங்கவயலில் விலையுயர்ந்த தங்கப் படிவங்கள் காணப்படுகின்றன என்ற மகிழ்ச்சியான செய்தி கிடைத்த ஒருமாத காலத்திற்குள், நிர்வாகம் மத்திய அரசாங்கத்திற்கு மாற்றப்படுகிறது என்ற செய்தியானது, மாநில அரசாங்கத்தின் வருவாயை மத்திய அரசாங்கம் தட்டிப் பறிக்கின்ற ஏகாதிபத்திய நிலையை நாட்டுக்கு உணர்த்துகிறது.

கருநாடக மாநிலத்தைப் பொறுத்தவரை, தங்கவயல், அரசாங்கத்திற்குக் கிடைக்கின்ற வருவாய்த் துறையில் ஒன்றாகும்.

நிர்வாக மாற்றத்திற்குக் காரணம், மாநில அரசால் வெற்றிகரமாக நடத்த முடியவில்லை என்று அரசாங்கம் மக்களுக்குச் சமாதானம் கூற முன்வந்திருக்கிறது என்றாலும், மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

மத்திய அரசாங்கம், மாநில அரசை என்றென்றும் தனக்கு அடிமையாக இயங்கவேண்டும் என்று கருத்துக்கொண்டுள்ளதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளதாகத்தான் மக்கள் கருதுகிறார்கள்.

இல்லை என்றால், மாநிலத்தின் வருவாய்த் துறையில் ஒன்றை மத்திய சர்க்கார் பறித்துக்கொள்ளாமல், தன்னுடைய மேற்பார்வையின்கீழ் மாநிலமே நிர்வாகத்தை திறம்பட நடத்த உதவி இருக்கலாம்.

மாநில அரசே வெற்றிகரமாக நடத்தத் தன்னுடைய முழு ஒத்துழைப்பையும், பொருளாதார நிபுணர்களின் உதவியையும் மத்திய அரசு செய்திருக்கலாம்.

தான் ஏற்று நடத்தும்போது-திறமையோடு நடத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கும்போது, மாநில நிர்வாகத்திற்குத் தன் முழு உதவியையும் அளித்துத் திறம்பட நடக்கச் செய்யவேண்டியது மத்திய சர்க்காரின் கடமை என்ற போதிலும், அதிலிருந்து தவறிவிட்டது.

தங்கத்தை மாநில அரசு வெட்டி எடுப்பதில் இலாபமா, நட்டமா என்பது ஒருபுறமிருக்க, தங்கம் விளையும் வயல்கள் திராவிடத் தரணியில் உண்டு என்பதில் நாம் பெருமை கொள்ளவேண்டியதாகும்.

உலகத்திலேயே தங்கம் விளையும் பூமிகள் அதிகம் இல்லை!

என்றும் மங்காத மதிப்புக் கொண்டது தங்கம்!

மண்ணுக்கு அடியிலே தங்கம் கிடைக்கின்ற நாடுகள், இம் மண்ணுலகில் தலை நிமிர்ந்து வாழுகின்றன!

தரணியிலே பெருமையோடு தலை நிமிர்ந்து நிற்கின்றன!

ஆனால், திராவிடமோ, வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு அடிமைபட்டுக் கிடக்கிறது.

இங்கே தங்கம் கிடைக்கிறது. அங்கே (பம்பாயில்) அதன் மதிப்பை நிர்ணயிக்கிறார்கள்.

இப்போது அதை எடுக்கின்ற உரிமையையும் அவர்களே பெறுகிறார்கள். காங்கிரசு ஆட்சியின் நிர்வாகத்திலுள்ள ஊழல்கள் காரணமாகத்தான் தங்கவயல் நிர்வாகத்தை மாநில அரசு இலாபமுடன் நடத்த முடியவில்லை என்று சட்டமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டது.

அதை மறுத்துரைத்த காங்கிரசு ஆட்சி, நிர்வாகம் நல்லமுறையில்தான் நடக்கிறது என்று விளக்கம் அளிக்கிறது.

அப்படி என்றால், இதில் மத்திய அரசாங்கம் ஏன் ஈடுபடவேண்டுமென்பது மறைபொருளாக இருக்கிறது.

இந்தப் பிரச்சனையில் மத்திய அரசு கொடுத்துள்ள விளக்கம் மிகவும் வேடிக்கையானதாகும்.

தங்கத்தை மாநில அரசாங்கம் வெட்டி எடுத்தாலும் அதை மத்திய அரசுக்கு கொடுத்துவிடவேண்டும்.

மத்திய அரசு அதை அகில உலக நிலவரத்திற்கு (International) எடுத்துக்கொண்டு, உள்நாட்டு விலைக்கு (Internal) விற்கிறது.

இந்தியாவில் தங்கத்தின் விலையில்(உள்நாட்டு விலை)

பாதிக்கும் குறைவானது அகில உலக விலை என்பது குறிப்பிடத்தக்கது.

உலக விலை குறைவாகவும், உள்நாட்டு விலை அதிகரித்தும் இருக்கிறது.

ஆக மத்திய அரசு குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்கிறது.

இப்படிப்பட்ட வியாபாரத்தினால் மாநில அரசுக்கு நஷ்டமும் மத்திய அரசுக்கு இலாபமும் கிடைக்கிறது.

மாநிலத்திற்கு உண்டாகும் இந்த நஷ்டத்தை ஈடு கட்ட ஒரு குறிப்பிட்ட தொகையை மத்திய அரசு கொடுக்கிறது என்றாலும், மாநிலத்திற்கு இந்தத் துறையில் இழப்பே.

உள்நாட்டு (Internal) விலைக்கு தங்கத்தை மத்திய அரசு வாங்குமேயாகில், மாநிலத்திற்கும் இலாபம், மாநில அரசும் நல்ல வருவாயுடன் திறம்பட இயங்கமுடியும்.

சட்டப்படி மத்திய அரசு தங்கத்தை உலக நாடு விலைக்கேற்றபடிதான் வாங்கமுடியும் என்ற மத்திய சர்க்காரின் போக்கு நேர்மையாகத் தோன்றவில்லை.

நம்முடைய நன்மைக்காக நம்மால் இயற்றப்பட்ட சட்டம் நமக்குத் தீங்கு பயப்பதாக இருக்கிறதென்றால், அதைமாற்றிஅமைப்பதுதான், நாட்டின் நல்வாழ்வுக்குப் பயன் அளிக்கும்.

சட்டம் நமக்காக இருக்கவேண்டுமே ஒழிய, சட்டத்திற்காக நாம் இருக்கவேண்டுமென்பது கடைந்தெடுத்த முட்டாள்தனமான வாதமாகும் என்பதுதான் அறிஞர்களின் கூற்று!

எப்போதோ ஏதோ சூழ்நிலையில் ஏற்படுத்தப்பட்ட சட்டத்திற்கு இப்போது நாம் தலைவணங்கி, நம் செல்வங்களை வடநாட்டாருக்குக் கொட்டிக் குவிக்க வேண்டியுள்ளது!

மத்திய அரசாங்கத்தின் எந்த இலாகா இதனை ஏற்றுப் பணியாற்றுவது என்று பலத்த சர்ச்சை ஏற்பட்டுள்ளது!

இதனை நிதி இலாகா (Finance Ministry) ஏற்று நடத்துவதா, அல்லது சுரங்க இலாகா (Ministry of Mines and Fuel) ஏற்று நடத்துவதா என்று மத்திய அரசு தீவிர ஆலோசனை நடத்தி, நிதி இலாகாவிடம் ஒப்படைக்க முன் வந்துள்ளது.

எடுக்கப்படுவது தங்கம் என்ற உடன் இத்தனை முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை.

தார்வார் பகுதியிலும் விலை உயர்ந்த சிறந்த தங்கப் படிவங்கள் காணக் கிடக்கின்றன என்ற ஆராய்ச்சியிலிருந்து, இம்மாநிலம் எதிர்காலத்தில், தங்கத்தை வெட்டி எடுப்பதில் உலகத்திலேயே ஓர் உன்னத நிலையை அடைய முடியும்!

இந்தியா ஒரே நாடு என்று காங்கிரசார் எழுப்பும் காட்டுக் கூச்சல் காரணமாக நம் செல்வமெல்லாம் வடக்கு நோக்கி போய்க்கொண்டிருப்பது வேதனைக்குரியதாகும்.

மத்தியஅரசு மாநிலத்தைக் கட்டாயப்படுத்தித் தங்கச் சுரங்கத்தின் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்வதானது, மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள தோழைமையைப் பாதிக்கிறது என்று அரசியல் வட்டாரம் கூறுகிறது. என்றாலும் மாநில அரசின் வருவாய்த் துறையில் தலையிட்ட மத்திய அரசின் இப்போக்கு, ஏகாதிபத்திய ஆட்சிக்கு எத்தர்கள் துணை புரிவதைத்தான் காட்டுகிறது. தென்னகத்தை வடநாடு சுரண்டுகிறது என்பதற்கான எடுத்துக்காட்டுதான் கருநாடக மாநிலத் தங்கத்திற்குப் பங்கம்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

பழி என்றும் மாறாப் பழியாகிவிட்டது. நீ பாதிக்கப்பட்டதாகக் கூறுகிறாய். ஆனால், அதைக் கூறத் தயங்குகிறாய். உன் பழிக்குப்பழியான செயல் கூறவிடாது வெட்கத் திரை போடுகிறது'' அக்குரலின் மொழி.

"இல்லை. என்னைக் கொல்லாதே நண்பா! நான் சுயநலவாதி அல்ல! அவ்வாசையும் இல்லை. வெறியும் கிடையாது. என்னைச் சோதிக்காதே, நீ போய்விடு.''

"என்ன அழகான உபசரிப்பு! நண்பா நான் எங்கு செல்வது? உன் தவறுகள் இன்னமும் சமுதாயத்தில் நிகழ்ந்தால்......''

"சமுதாயத்தில் சண்டாளர்கள் நிறைந்திருக்கும் வரை எனது சீரிய பணி இருந்தே தீரும். இது என் கொள்கை.''

"தீயவன் உண்மையில் தீயவனே அல்ல. அவனைத் தீயவன் என எண்ணி அவன் கைகளை வெட்டி விட்டதாகக் கூறுவது சீர்திருத்தப் பணியின் வரிசையில் இடம் பெறாது.''

"தேவையில்லை. எத்தனையோ நல்லனவற்றை மறந்துபோன சமுதாயத்தில் இதற்குப் பெருமை வேண்டுமென எண்ணியதில்லை.''

"இந்த உலகில் நீ ஏன் பிறந்தாய்?''

"அந்தச் சமுதாயம் ஏன் பிறந்தான் எனக் கேள் நண்பா!''

"உன்னைப் பற்றி உனக்கே தெரியாதா?''

"தன்னை அறிந்தவர்கள் உலகில் மிகமிகக் குறைவு. அறிய முற்படுவர் சிறிது அதிகம். அந்த எண்ணிக்கையில் நானும் ஒருவன்!''

"என்றால் உன்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை.''

"முடியாதுதான். ஆனால் எனக்கு உன்னைப்பற்றித் தெரியும்''

"என்னைப் பற்றித் தெரியுமா?''

"ஆமாம்; உன்னுடைய பேச்சிலிருந்து தெரிய வருகிறது''

"ஆனால்,உன்னைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தவறுதல் மனித இயல்பு. அதைத் தாங்கு

(13-ம் பக்கம் பார்க்க)

ஆணவம் அடக்குக!

[க. இராசன்]

ஆண்மையில் டெல்லிப் பேரமைச்சர் ஒருவர் சென்னைக்கு வந்திருந்த போது, தி. மு. கழகத்தின் குறிக்கோள்கள் பற்றி வினவினாராம். அப்போது அருகிலிருந்தவர்களில் ஒருவரான பச்சைத் தமிழர் புகன்றாராம், "அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று அவர்களுக்கே புரியவில்லை" என்று. 'தி. மு. கழகம் என்ன சொல்கிறது என்று தி. மு. கழகத்திற்கே தெரியாமலா தி. மு. கழகம் ஐம்பது சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்றது? திருச்செங்கோட்டைக் கண்டது?' என்று மக்கள் திரும்பக் கேட்கமாட்டார்கள், தம்மைப் பற்றியும், தம் அறிவுத் திறனைப் பற்றியும் நினைத்துப்பார்க்க மாட்டார்கள் என்று எந்தத் துணிச்சல் அவரை அப்படித் தட்டிக் கொடுத்துப் புகலச் செய்ததோ தெரியவில்லை.

மேற்கூறிய பேரமைச்சரின் வினாவையும், அதற்கு விடையளித்த அடிமையமைச்சரின் பதிலையும் கேள்விப்பட்ட, பத்திரிகை வாயிலாகப் படித்த பலரின் கண் முன் பழைய காலத்து நாடக மேடைதான் காட்சியளித்திருக்கவேண்டும். "மந்திரி, நமது நாட்டினில் மாதம் மும்மாரி பெய்ததா?" என்று மன்னன் கேட்க, "ஆம் அரசே பெய்தது; மழை பெய்தது!" என்று மந்திரி பதில் கூறுவதைத்தான் அந்த நாடக மேடையிலும் கண்டிருக்கலாம். ஆனால், இந்த மந்திரியோ "தெரியவில்லை அரசே! புரியவில்லை அரசே!" என்று அந்த இராசாவையும்—நாட்டு நிலையறியாத கிணற்றுத் தவளையாக இருப்பதில் — பலபடி மிஞ்சிப்போய்த் தம் பெருமையைக் காட்டிக்கொண்டிருக்கிறார். இப்படிப்பட்டவர்தான் தம் மேதைத் தனத்தை முழுக்க முழுக்கக் காட்டித் தீர்த்துவிட வேண்டும் என்ற முடிவோடு கடந்த சில தினங்களாக அருமையான சில கருத்துரைகளை வாரி வாரி எறிந்து கொண்டிருக்கிறார்.

"மறியல் மூலம் இன்றியமையாத பொருள்களின் விலைகளைக் குறைக்க இயலுமானால், நானே 10 நாட்களுக்குத் தொடர்ந்து அரசு அலுவலகங்களின் முன்பாக மறியல் செய்வேன்!"

"வெளியிலிருந்தால் சவரம் செய்து கொள்வதற்கு நாலணா கொடுக்கவேண்டும். சிறைக்குள்ளே சவரம் செய்வதற்குக் காசுகொடுக்க வேண்டுவதில்லை. அதனால்தான் தி. மு. கழகக்காரர்கள் மறியல் செய்து சிறைக்குப் போயிருக்கிறார்கள்."

"தி. மு. கழகக் காரர்கள் சிறைக்குள்ளே ரொட்டி சாப்பிட்டுக் கொண்டு,கட்டிலில் படுத்திருக்கிறார்கள்"

"மூன்று மாதங்கள் சிறையிலிருப்பதற்குப் பயந்துகொண்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வருகின்ற இவர்கள், திராவிடநாடு எப்படிப் பெறப் போகிறார்கள்?"

"ஐயயோ திராவிடநாடு ஆபத்தானது. நாம் சும்மா இருந்தால் அவர்கள் நாட்டைப் பிரித்துக் கொண்டு போய்விடுவார்கள்."

"திராவிட முன்னேற்றக் கழகத்தை நானே பார்த்துக்கொள்கிறேன்!"

"தி. மு. கழகம் வகுப்புவாதக் கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு காங்கிரசை எதிர்க்கிறது"

"முஸ்லீம்களே, தி. மு. கழகத்துக்கு ஆதரவு கொடுக்காதீர்கள்!"

"தி. மு. கழகம் சுதந்திராகட்சியின் அல்சேசியனாக வேலை செய்கிறது!"

"தி. மு. கழகம் திராவிட நாடு பெற்றுவிட்டால் எனக்கோ அல்லது இராஜாஜி அவர்களுக்கோ அரசியலிலே இடமேது?"

இவ்வளவையும் ஒரே ஆள் சொல்ல வேண்டுமானால், அது இப்படிப்பட்ட மேதையைத் தவிர, வேறு யாரால் சொல்லமுடியும்?

இவ்வளவையும் நாட்டு மக்கள் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதே வேளை சிறைக்குள் போனால் சவரம் செய்வதற்கு நாலணா கொடுக்க வேண்டுவதில்லை என்று இந்த மேதை ஏன் சொல்லிக் கொண்டு திரிகிறார் என்பதை இந்தப் படிக்காத மேதையின் மதுரைச் சிறையிலே நாம் பறிகொடுத்த பொற்செழியனையும், சென்னையிலே நாம் இழந்துவிட்ட கோ. சு. மணியையும் வைத்து எண்ணிப் பார்க்கத்தான் செய்கிறார்கள். விடுதலை வீரருள் சாகா நிலை பெற்றுவிட்டோரின் பட்டியலில் சேர்ந்துவிட்ட அந்தப் பெருவீரர் இருவரையும் இந்த நாடு எதிர் காலத்தில் எண்ணும் போதெல்லாம், அவர்களை நாம் இழப்பதற்குக் காரணமாயிருந்த மேதையையும் எண்ணத்தான் செய்யும் என்பதையும் மக்கள் உணராமலில்லை.

ஆனால் இன்றைய நிலை இவற்றையெல்லாம் நாட்டு மக்கள் சும்மா உணர்ந்தால் போதும் என்பதோடு அமைவதாக இல்லை.

அதோ, வருகின்ற நகரமன்றத் தேர்தல்களை மனத்தில் வைத்துக் கொண்டு ஊரூருக்கும்-குறிப்பாகச் சென்னையில்—ஒரு கும்பலை உசுப்பி விட்டுக் கலாம் விளைக்கச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் — இந்த மேதையும் அவர்தம் சகாக்களும்.

அந்தக் கும்பலோ:

"தி. மு. கழகத்தை எதிர்த்து முறியடிக்க நாங்கள் துப்பாக்கி ஏந்தவும், வெடிகுண்டு வெடிக்கவும் தயங்கமாட்டோம்!"

என்று வெறிக் கூச்சல் போட்டுக் கொண்டு திரிகிறது.

இந்தக் கும்பலின் வெறிக் கூச்சல் எல்லாம் நகரமன்றத் தேர்தல்களின்முடிவோடு காலாவதியாவதே என்பதை மக்கள் நன்கு அறிந்துதானிருக்கின்றனர். எனினும் நகரமன்றத் தேர்தல்களில் இந்த வெறிக் கூச்சலுக்கு மூல காரணமானோர் எல்லாம் மூலையிற்போய் ஒடுங்கிவிடுமாறு செயல் புரிய வேண்டும்! அதுவே இந்த மேதையின் முன்னுக்குப் பின் முரணான பேச்சை, முரணான செயலைத்தானே தெளியச் செய்வதற்கு — ஆணவத்தை அடக்குவதற்குச்—சரியான வழி! நகர்ப்புறத்து மக்கள் இதனை நன்குணர்ந்து செயல் புரிய இப்போதே சித்தம் செய்து கொள்வார்களாக!

★

தோழனே நீ வாழ்க

[ப. தா. செல்வன் பி. ஏ.]

தோழனே நீ வாழ்க! சொட்டச் சொட்டச் செங்குருதி நிலத்தில் வீழ, கண்ணீரும் சும்பலேயும் உள்ளத்தை உருக்குவிக்க, மக்களின் துயரினை நீக்க மாருத தழும்பு பெற்ருேனே நீ வாழ்க! அண்ணன் சென்ருன்! அவனுக்கு முன் சென்றேன் என அகத்தில் துடிப்பும், முகத்தில் செழிப்பும் பொங்க வீர நடைபோட்ட என் வெற்றிச் செம்மலே, உன் செழிப்பை அழிக்க மாற்ருர் விளைத்த அடக்குமுறை உன்னைத் தாக்கவில்லை. உன் மலர்ச்சியை மறைக்க அவர் கொட்டிய கண்ணீர்ப்புகை உன்னை மாற்றவில்லை. விழுப்புண் படா நாட்கள் வீணை நாட்களென எண்ணித் துடிக்கும் வீரர் வழி வந்தவனே, வெங்குருதிதனிற் தவழ்ந்து, வீரஞ் செய்கின்ற தமிழ் எங்கள் மூச்சு என முழக்கமிடும் தமிழர் வழி வந்தவனே, எதுவரினும் வருக, எதிர்ப்போர் திரளட்டும், தூற்றுவோர் துள்ளட்டும் என அஞ்சா நெஞ்சுடன் களத்தில் குதித்து, கடுந் தண்டனையேற்று, கடுஞ்சிறை புகுந்தோனே நீ வாழ்க! தென்னக விடுதலைப் பயணத்தைத் துவங்கியுள்ள விடுதலைப்படை வரிசையில் அங்கமென,எந்நாள் உன் பெயரைப் பொறித்தாயோ, அன்றே நீ எதற்கும் சொந்தமல்லன், எவர்க்கும் சொந்தமல்லன் என ஆகிவிட்டாய். உன் சிந்தனை, உன் செயல், உன் மூச்சு அனைத்தும் விடுதலைப்படைக்குக் காணிக்கையாக்கி, அந்நாள் எந்த நாளோ? என் சொந்த மாநிலத்தை,எந்தன் சுற்றம்,எந்தன் இனம் ஆளத்தொடங்குவது என ஏங்கத் தொடங்கினுயோ, அன்றே உன்மாற்ருர், உன்மீது வீசப்போகும் கணைகளைத் தீட்டத் தயாராகிவிட்டனர். உன்னை உடலால் அழித்து உயிரை வாட்டி, உன்னை அணு அணுவாகச் சித்திரவதை செய்யத் திட்டமிட்டனர். அந்தத் திட்டமும் செயலும்தான் உன்னை இன்று இந்நிலைக்குக் கொணர்ந்தன. எனினும் வெஞ்சிறை வாசம் உன்னை மாற்றவில்லை. பொல்லாங்குக் குண்டுகளும், குண்டாந்தடிகளும் உன்னைக் களத்தைவிட்டு ஓட்டவில்லை. "நாடு வாழ்க... நாடு வாழ்க, என் இலட்சியம் உயர்க என" வீரமுழக்கமிட்டு, அகவிலை குறைக, அடக்குமுறை ஒழிக! எனக் குரல் எழுப்பிச்சென்ற உன்னைக் கொடியோர் இருட்டறைக்குள் அடைத்துவிட்டனர். சிறைச்சாலைக்குள் சிங்கங்களை அடைத்துவிட்டு, வெளியே வெறியாட்டம் நடத்தித் தங்கள் எண்ணத்தைச் செயலாக்கித் திராவிடப் பெருங்குடி மக்களின் முகத்திலே — மாசு கற்பிக்கத் துணிந்த மாற்ருர்க்கு, திருச்செங்கோடு—சித்தூர் வீரர்கள் நல்ல பாடம் கற்பித்துவிட்டனர். கொடிய அடக்குமுறை வெல்லவில்லை. குண்டடியும், குண்டாந்தடியும் உன் செயலை மறைக்கவில்லை. எந்த ஒரு இலட்சியத்திற்காக ஏறுநடை போட்டு வீரக்குரல் எழுப்பி வீதிகளில் வலம் வந்தாயோ — அந்த இலட்சியத்தின் ஒருபகுதி திருச்செங்கோட்டிலே—சித்தூரிலே உன்னைப் புன்னகையுடன் வரவேற்கிறது. அதனை எண்ணிச் சிரிப்பாயாக. பெற்ற வெற்றியைஎண்ணிப் பெறப்போகும் வெற்றிக்காக எதிர்நோக்கி இருப்பாயாக! நீயும் உன்உடன் சென்ற பல்லாயிரக்கணக்கான தோழர்களும் பட்ட கொடுமையும் கொட்டிய குருதியும் வீண் போகவில்லை எனஎண்ணி மகிழ்வாயாக. அடக்குமுறை வென்றதில்லை, விடுதலைப் படை அழியவில்லை என எழுதப்போகும் வீர வரலாற்றின் முதற் பாகத்தை முடிப்போனே, கண்ணீர் களிப்பு நீராக, செந்நீர் சிரிப்பு நீராக மாறி, உள்ளமெல்லாம் மகிழ்ச்சிப் புனலில் நீயும் நானும் ஆடிக் களிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லையென மகிழ்ந்து நீ ஆறுதல் பெறுவாயாக.

தோழனே நாடு உன்னை வாழ்த்துகிறது. நல்லோர்கள் வாழ்த்துவர். உன் செங்குருதியைக் கண்ட இம் மாநிலம் உன்னை வாழ்த்தும். எவர் துயர் துடைக்க, பெருந்துயர் நீ அடைந்தாயோ, அவர்கள் யாவருமே உன்னை வாழ்த்துவர். நன்றி செலுத்துவர்.

என் இனிய தோழனே! நீ வாழ்க.

○

விற்பனையாளர்களுக்கு

"திராவிட நாடு" விற்பனையாளர்கள், தங்கள் பட்டியல் பாக்கியை உடனுக்குடன் அனுப்பிவைக்க வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் திகதிக்குள் பட்டியல் பாக்கி அனுப்பாதவர்களுக்குப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிரேம்.

பொறுப்பாளர்

"பசி தீர்க்கவந்த பணம்!"

உடல்சோர, உள்ளமும் சோர அந்த மையிருட்டில் தட்டுத் தடுமாறிக் குடிசையை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தான் திருமலை.

இவ்வையத்தை மறைத்திட்ட காரிருளைப்போல, அவனது வாழ்விலும் வறுமையெனும் காரிருள் கப்பியிருந்தது.

ஒருவேளை சோற்றுக்கு எப்படியெல்லாம் போராட வேண்டியிருக்கிறது என்று எண்ணும்போது, இந்தப் பிறவியின்மீது வேண்டாத ஒருவித வெறுப்பு மூண்டெழுந்தது அவனது உள்ளத்தில். 'சே, என்ன வாழ்க்கையிது! ஒரு நாயாகப் பிறந்திருந்தாலும் நாலு வீட்டு எச்சிலைக் கொண்டாவது காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கலாமே! நிம்மதியின்றி அலைந்தலைந்து என்ன சுகத்தைக் கண்டோம்!' மனம் சலித்துக் கொண்டது.

இந்த இலட்சணத்தில் திருமணத்தையும் முடித்துக்கொண்டான். தான் துயரப்படுவதுமல்லாமல் இன்னொரு உயிரையும் வாட்டி வதைக்க வேண்டியிருக்கிறது.

வாழ்வில் ஒளியேற்ற வந்த விளக்கு, கருகி மடிவதை அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. வயிறு நிறைய உண்டு எத்தனை நாட்களாகி விட்டன! மணமாகி ஆறு மாதங்கள் கூடக் கடந்திருக்காது. அதற்குள் அந்த மாந்தளிர் மேனி, மலர்முகம், வாடி வதங்கிவிட்டதே! இதயம் இரும்பாய்க் கனத்தது.

துக்கம் தாளாமல், "இந்தப் பரிதாபத்துக்குரியவனை ஏன் மணக்கச் சம்மதித்தாய் சாந்தா! பூத்துக் குலுங்க வேண்டிய உன் வாழ்வைப் பாலையாக்கி விட்டேனே!" வேதனையோடு வினவினான் ஒருநாள்.

"ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? நாம் மட்டும்தானா துயரப்படுகிறோம்? வறுமை வேள்வியில் விழுந்து கருகியவர்கள் எத்தனையோ பேர்! இன்னும் வெந்து மடிந்து கொண்டிருப்பவர்கள் கணக்கிலடங்காமல் இருக்கிறார்கள் இந்த நாட்டில்!

நாமாவது வாழத் துடிக்கிறோம்! அந்தத் துடிப்புக்கூட இல்லாமல் ஒடுங்கிக் குற்றுயிராய் கிடப்பவர்களைப் பார்க்கும்போது, இந்த

அறம் வளர்த்தான்

வாழ்வே மேலானது என்று எண்ணத் தோன்றும்" என்று தேற்றினாள் அந்த இல்லத்தரசி. நினைவுச் சுழலில் சிக்கிய நெஞ்சம் நெக்குருகியது.

*

பாவம்! பசியோடு போராடிக் கொண்டிருப்பாள் விரைந்து சென்று வேதனையைத் துடைப்போம் என வேகத்தைத் துரிதப்படுத்தினான்.

வேலையற்ற இந்நாட்களில் திருமலையைப் போன்ற கூலிகள் காலத்தைக் கடத்துவது என்பது புலியோடு போரிடுவது போலத்தான். என்ன செய்வது? பிறந்து விட்டோமே இந்த நாட்டில்!

"சாந்தா" என்று குரல்கொடுத்த வண்ணம் சாத்தியிருந்த கதவைத் திறந்தான். உள்ளே எவரும் இல்லை! அடுப்பங்கரையில் படுத்திருந்த பூனைதான் அவனது வரவைக் கண்டு வெகுண்டோடியது. வெளியே வந்து விழிகளை நாற்புறமும் அலையவிட்டான். எங்கும் அவனது நோக்கில் பிடிபடவில்லை அவள். எங்கே போயிருப்பாள் இந்த நேரங்கெட்ட நேரத்தில்? கேள்விக் குறியை இதயத்தில் செருகிக்கொண்டு திரும்பவும் குடிசையினுள் நுழைந்தான். புட்டி விளக்கில் முளைத்திருந்த ஒளி காற்றில் அலையுண்டதைப் போன்று தவித்தது உள்ளம்.

அவளுக்கு ஏதாவது.........! செ! எதற்கிந்த வீண்பிரமை. எங்காவது வெளியே சென்றிருப்பாள். மனத்தை இழுத்துப் பிடித்துச் சமாதானம் செய்துகொண்டான்.

மேல் துண்டில் முடிந்திருந்த அரிசியை எடுத்து; அவளை எதிர்பார்க்காமலே சமையல் செய்ய முனைந்தான்.

"அத்தான்" என்ற இன்குரலைக் கேட்டுத் தலைநிமிர்ந்தான் திருமலை. அங்கே சமையலுக்கு வேண்டிய பொருள்களுடன் உள்ளே நுழைந்தாள் சாந்தா! அவள் கொண்டு வந்த உணவுப்பொருள்கள் இரண்டு நாட்களுக்குப் போதுமானதாக இருந்தது.

வியப்பாக இருந்தது அவனுக்கு. வீட்டில் ஒரு காசுகூட இல்லை! அவள் கழுத்திலிருந்த ஓரிரு நகை நட்டுகள் எப்போதோ வட்டிக்கடையில் சரணடைந்துவிட்டன! பாத்திர பண்டங்கள்கூட இல்லையே!

"ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்!" சிந்தனையை முறித்தாள். "ஐந்து ரூபாய்க்கு இவைகளை வாங்கினேன்! இன்னும் மீதி ஐந்து ரூபாய் இருக்கிறது! சிறிது நேரத்திற்கு முன்புதான் ஒருவர் பத்துரூபாய் கொடுத்துவிட்டுப் போனார்!" மகிழ்ச்சி நிறைந்திருந்தது அவளது குரலில்.

"சாந்தா! யார் கொடுத்தார்கள்! எதற்குக்கொடுத்தார்கள்?" சந்தேகம் முளைவிட்டது.

"கந்தப்பன் கொடுத்தார்"

கந்தப்பன் என்ற சொல்லைக் கேட்டதும் திருமலைக்கு குருதி சூடேறிற்று! சினம் கண்களைச் சிவக்கவைத்தது!

"சொல்! எதற்குப் பணம் கொடுத்தான்? நீ எதற்காகக் கையேந்தி வாங்கிக்கொண்டாய் அந்தக் கயவனின் காசை?" வார்த்தைகள் வெடித்தன. பார்வை செந்நிறக் கோளங்களாகி பயமுறுத்தியது.

"நம் துயரத்தைக் காணச் சகிக்காமல் மனமிரங்கி உதவி செய்வதாகக் கூறினன். திக்குத் தெரியாது திசைமாறித் தடுமாறும் பஞ்சைகளுக்கு வாழ்வுப் பாதையைக் காட்டுகிருனும்! நாட்டின் நலிவைப்போக்க நம்போன்றவர்களுக்கு உதவுவதுதான் அவனது இலட்சியமாம்!" அச்சத்தால் வார்த்தைகளை எண்ணி வைத்தாள்.

"மானத்தைத் துறந்து பசிக் கொடுமையைக் கூறிக் கெஞ்சியிருப்பாய்! வள்ளலாக மாறிவிட்டான் அவன்! எந்தெந்த இடத்தில் கருணைகாட்டவேண்டும் என்று கந்தப்பனுக்கு தெரியாதா என்ன?"

"என்ன சொல்லுகிறீர்கள்? கொஞ்சம் புரியும்படிதான் பேசுங்களேன்."

"நானென்ன புதிரா போடுகிறேன். மானத்தை விலை பேசாதே என்கிறேன்! தலைகுனியச் செய்துவிடாதே என்கிறேன்!"

"அப்படி என்ன தலைகுனிவு வந்துவிட்டது. தூய உள்ளத்தோடு ஆதரவளிக்க வந்தவனல் அவமானம் ஒன்றும் நேர்ந்துவிடாது. இந்தச் சகதியிலிருந்து மீள ஒரு வழி பிறக்கும்" என்ருள் சற்றுக் கடுமையாக.

"அடி பாவி! ஒரு பாவமும் அறியாத அப்பாவியாக இருந்தவள் இன்று துரோகத்திற்கே துணிந்துவிட்டாயா?" அவள்மீது கொண்ட அன்பின் உறுதி தளர்ந்தது அந்த சொல்லம்புகளால்.

"நீ சொல்வது உண்மைதான் சாந்தா. இந்தப் பஞ்சையால் பசுமையாக்க முடியவில்லை உன் வாழ்வை. உள்ளன்பு ஊற்றுகப் பெருக்கெடுத்தாலும் பணத்திற்கும் பகட்டிற்கும் முன்னல் போலியாகத்தான் இருக்கும்.

இந்தச் சகதியிலிருந்து மீண்டு உன் விருப்பம்போல் வாழ்க்கையை அமைத்துக்கொள்.

சீ! நீங்களும் ஒரு மனிதரா? வெட்கமாயில்லை உங்களுக்கு! உங்களுக்குள்ள மான அவமானம் எனக்கும் உண்டு. இப்போது அப்படி என்ன நடந்துவிட்டது."

"இன்னெருவனுக்கு அடிமையான பிறகு; இன்னும் என்ன நடக்கவிருக்கிறது?"

"ஐயோ! இது அநியாயம்! அக்ரமம்!!"

"சீ, பேசாதே!" அவனுக்கு வந்த கோபத்தில் பளீரென ஓங்கி ஒரு அறை கொடுத்தான். ஒரே அறையில் சுருண்டு விழுந்துவிட்டாள் சாந்தா! நாளெல்லாம் பசியால் வாடிய அவள் பேச்சு மூச்சின்றி, மயங்கிவிட்டாள்.

நெஞ்சம் கொதித்துக் குமுற, நிலையிழந்து அமர்ந்துவிட்டான் திருமலை. உடல் முழுதும் திராவகம் கொட்டப்பட்டது போன்று துடித்தான்.

வாயிற்படியில் ஆளரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அங்கே தூய வெண்ணுடை தரித்து ஒரு தியாகியைப் போல காட்சியளித்தான் கந்தப்பன்.

இரையைக் கண்ட புலிபோல அவள்மீது பார்வையைச் செலுத்தினுன் திருமலை.

'ஆத்திரப்பட்டு எதுவும் செய்துவிடக் கூடாது, கேட்கவும் கூடாது பழியை நம்மீதே போட்டுவிட்டுத் தப்பி விடுவான் வஞ்சகன்' ஒன்றுமறியாதவனைப்போல வாளா இருந்தான்.

திருமலையைக் கண்டதும், "உன்னைக் காணத்தான் ஓடோடி வந்தேன். சிறிது நேரத்திற்கு முன் வந்தபோது உன்னைப் பார்க்க முடியவில்லை. எங்கே சென்றிருந்தாய்" என்று புன்முறுவலோடு கேட்டான். "உங்களைப்போல உட்கார்ந்த இடத்தில் உண்ண நாங்கள் கற்றுக்கொள்ளவில்லையே! என்ன செய்வது?" எரிச்சலோடு வார்த்தைகளைக் கொட்டினுன்.

"கூடியசீக்கிரம் எல்லோருக்கும் அம்மாதிரியான நிலைமையை உண்டாக்கத்தான் நாங்கள் பாடுபடுகிறோம்! அதற்காக..."

"அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும் நீ அளித்த பிச்சை எவ்வளவு பெரிய புயலைக் கிளப்பிவிட்டது என்பது உனக்குத் தெரியாது. எங்கள் நிம்மதியையே கொன்றுவிட்டது" துயரம் தோய்ந்த குரலில் சொன்னுன்.

"அப்படி என்னநடந்துவிட்டது?" வியப்போடு கேட்டான் கந்தப்பன்.

"அதைப்பற்றி பேசாதே. தயவு செய்து முதலில் இந்த இடத்தை விட்டுக் காலி செய். நீதரும் பத்து ரூபாய் காசினுல் எங்கள் தரித்திரம் நீங்கிவிடாது. இந்தா நீ கொடுத்த பிச்சை." என்று ஆத்திரத்தோடு ஐந்து ரூபாயையும் கூடையிலிருந்த பொருள்களையும் எடுத்து அவன் முன் வைத்தான்.

"அப்படியென்ருல் எனக்கு ஒட்டு இல்லையா?" நம்பிக்கையிழந்தவனய்க் கேட்டான்.

"அதனுல் எங்களுக்கு என்ன நன்மை? யாருக்காவது போட்டுத் தானே ஆகவேண்டும்."

"ஏதோ வேதனையில் ஆழ்ந்திருப்பதுபோலத் தெரிகிறது. மற்றெரு சமயம் வந்து பார்க்கிறேன்." என்று சொல்லிக்கொண்டே அந்த ஐந்து ரூபாய்த் தாளை மட்டும் எடுத்துக் கொண்டு நகர்ந்தான்.

இதயத்தை அழுத்திக்கொண்டிருந்த பாறங்கல் உருண்டோடியது போல இருந்தது. வேதனைப் பெருமூச்சை நெட்டித் தள்ளிவிட்டு அவளுக்கு மயக்கம் தெளிவித்தான் திருமலை.

இலேசாகக் கண்விழித்த சாந்தா; கணவன் கண்ணீர் சொரிவதைக் கண்டு "அத்தான் நான் ஒரு பாவமும் அறியாதவள். என்னை நம்புங்கள்!" என்ருள் ஈனக்குரலில்.

"இந்தப் பாவியை மன்னித்துவிடு சாந்தா! மன்னித்துவிடு!" கதறினன் அந்த அப்பாவி.

அதைத்தவிர வேறு என்னசெய்ய முடியும் அவனல்?

நீரோடை நீவாழி

தோழி! தோழி! என்று நானும் தொண்டை நீர் வற்றக் கூவிக் கூவிக் களைக்கின்றேன். கூவும் அவள் கூவட்டும் என்று ஓவியம் போல்உட்கார்ந்துவிட்டாயே! என்னடி வந்தது உனக்கு.

தலைவி! தலைவி! என்று உங்கள் மேல் உயிரையே வைத்திருக்கிறேனே, அதற்கு நீங்கள் தரும் பரிசு இதுதானா? உங்களோடு பேசவேகூடாது என்ற முடிவோடு தான் வந்தேன்.

என்னடி செய்துவிட்டேன் உன்னை...?

இன்னும் என்ன செய்யவேண்டுமென்ற ஆசை உங்களுக்கு! தலைவி தலைவி என்று அடைகாத்துக்கிடந்தேனே, அது என் குற்றம்தான். மணம் ஆனால் உன்னை எப்படியடி பிரிந்திருப்பேன் என்று அடிக்கடி சொல்லி என்னை மகிழ்விக்கும் அந்தத் தலைவி இல்லையே நீங்கள். அவனைக்கண்டதும்! காதல் கொண்டதும்! நாம் கொண்டிருந்த உறவெல்லாம் போக்கிடம் தெரியாமல் போனதன்றிக் கானல் நீராயும், கலைந்துவிட்ட கனவாயும் ஆனதோ தலைவி!

இதற்குத்தானா தோழி பிணக்கெல்லாம்! நல்ல தோழியடி நீ!

மறைந்து நின்று; அவன் செவிகளிலே விழும்படி ஊர் என்றாய்! ஊர் அருகே பொய்கை என்றாய்! பொய்கைக்கு அருகினிலே கானாறு என்றாய்! கானாற்றுக்கருகினிலே நான் வருவேன்! நீயும் வருவையோ என்று என்னிடம் கேட்டாயே, அவன் செவிதனிலே விழும்படி!

அதற்கென்னடி இப்பொழுது!

உன் உரைகேட்டுக் காதல் கரை காண வந்தானா? வந்தவன் சொந்தம் வளர்ந்தது எதுவரை? என்பதெல்லாம்கேட்டு மகிழுதற்கு நானொருத்தி இருக்கின்றேன் என்ற நினைப்பிருந்தால், பதினைந்து நாட்களாக என்னைப் பாராமலே இருந்திருப்பாயா?

உனக்கென்று இனிப்பொன்று கொண்டுவந்துள்ளேன் தோழி!

எனக்கொன்றும்இனிப்பொன்றும் தேவையில்லை போங்கள் தலைவி! என் செவியினிக்க உன் நாவினிக்க அவன் கொண்ட உறவை நீ சொல்ல நான் சுவைக்கவேண்டும். அந்த இனிப்பின்றி எந்த இனிப்பும் எனக்கொன்றும் தேவையில்லை.

நான் கொடுக்கும் இனிப்பல்லடி இது. அவர் கொடுக்கும் இனிப்புத்தான். சுவையேன்.

காதல் மடலா தலைவி!

ஆமாண்டி தோழி! என்னோடு அவர் கொண்ட உறவை! நான் உன்னோடு பேசி மகிழும் முன்னே! அவர் தன்னோடு உறவாடும் ஒருவனுக்கு மடலாக வரைந்துள்ளார்,

ந. இறைவன் பி. ஏ.

அவர் தன்னோடு உறவாடும் நண்பனுக்கு அனுப்புமுன்னே என்னோடு உறவாடும் உனக்குக் காட்டிவிட வேண்டும் என்கின்ற ஆவலில்தான் அவர் துயில்கொள்ளும் நேரம் பார்த்துத் தோட்டத்து வாயிலொடு எடுத்தோடி வந்தேன். படித்து முடித்துக்கொடு.

சுற்றி உலவிவிட்டு வாருங்கள், அதற்குள் நான் படித்து முடித்து கொடுக்கிறேன்.

நானும்தான் கேட்கிறேன், வாய் விட்டுப்படியேன். காலம் கடத்தாமல், இடையிடையே நிறுத்தாமல் படி!

கேளுங்கள் தலைவி!

படியடி நீ!

அன்புள்ள தோழ!

நலம். நாடலும் அஃதே! சென்ற மடலில் என் நெஞ்சத்தில் காதல் விதை தூவிய அந்தக்காரிகையைப் பற்றிக் குறிப்புக் கொடுத்திருந்தேன். கூட்டுதல் குறைத்தல் இன்றி நடந்ததை நடந்தவாறு எழுதவேண்டுமென்று அன்புக்கட்டளை பிறப்பித்திருந்தாய். அவள் என் நெஞ்சத்தில் காதல் விதை தூவிய அந்தக் காதையை உனக்கன்றி வேறு யாருக்கு நான் சொல்லி மகிழப் போகிறேன். அவள் என் நெஞ்சத்தில் குடிபுகுந்த அந்தக்காதையைக் கவிதை வடிவிலே எழுதி உனக்கனுப்பவேண்டுமென்பது என் இதயத்து வேட்கை. என் இதய ஆழியில் அவளைப் பற்றி எழுகின்ற எண்ண அலைகள் அப்பப்பா...... எப்படி எழுதப் போகிறேன். மடலை எழுதும்முன் அவளைப் பற்றிய எண்ணம் வேறு! மடலை எழுதத் தொடங்கியபின் அவளைப் பற்றிப் புதிய கற்பனை இதயத்தில் எழும்! எழுதி முடித்தவுடன் இன்னொரு எண்ணம் தோன்றும் இப்படி நொடிக்கு நொடி புதியவளாய்த் தோன்றுகின்ற அவளை எப்படி முழுமையாக எழுத முடியும், அதனால்தான் தவிக்கிறேன். என் எண்ணக் கோட்டங்களைப் பிணைத்து எழுத முடியாமல்

பலமுறை தோற்றேன். மடல் எழுதி முடிப்பேன். படிப்பேன். எண்ணங்கள் முழுமையும் அம்மடலில் எழுதப்படாமை கண்டு எரியூட்டுவேன் அந்த மடலை. இந்த மடல் ஏழாவது எட்டாவது முறையாக எழுதுகிறேன். இம் மடலிலேகூட என் எண்ணம் முழுதையும் விளக்கிவிட்டேன் என்று எண்ணிவிடாதே! முடிந்தவரை விளக்கியுள்ளேன். அதனால் இம்மடலும் முழு வெற்றியல்ல, முழு முயற்சி அவ்வளவுதான்.

நீதான் அறிவாயே நான் பூங்குன்றம் சென்றிருந்ததை. அங்கே என் முறைப் பெண் ஒருத்தியைப் பற்றி.. ...அதுதான் சின்னஞ்சிறு சிட்டாய் அழகு வளர் மொட்டாய் அவளிருந்த போழ்தே, அவள் என் நெஞ்சத்தை எப்படி எப்படி எல்லாமோ ஆட்டிப் படைத்தாள் என்பதைத் தான் சென்ற மடலில் உனக்கு விரிவாக எழுதியிருந்தேனே. நான் முன்பு சென்றபோதெல்லாம் அத்தான் அத்தான் என்று முத்துமொழியுதிர்த்து என் கழுத்தைக் கட்டிபிடித்துக்கொள்வாள். நாணம் அறியா வயது அது. இன்றோ பருவ எழில் பூத்துச் சிரிக்கின்ற புதுமலர் அவள். பார்த்தால் பாய்ந்தோடி மறைந்துவிடுகிறாள். ஊடி நடப்பாள் போல் முகவழகை மூடி நடக்கிறாள் முந்தானை துணைகொண்டு. பார்த்தாலும் பார்க்கும் கண்கள். பவழவாய் மட்டும் திறக்கவே திறக்காது. வஞ்சமறியாப் பிஞ்சுள்ளத்திலா இத்தனை நாணம். இன்று அவள் உடலில் உள்ள நளினங்கள் அனைத்திலும் நாணத்தின் சாயல் நிரம்பி வழிகிறது. பேதையாய் இருந்தபோதே அந்த அத்தான் என்ற சொல்லை அவள் சொன்னால் பேரின்பம் பிறக்குமே. இன்றோ அவளோர் பேரின்பப் பேழை. இன்று அவள் அழைப்பாள். அந்த அழைப்பிலே மிதந்துவரும் தேன் சுவையை நுகர்ந்து மகிழ்வோம் என்று எண்ணிச் சென்ற என்னை ஏமாற்றம் தாக்கியது. அவளோ அப்படி அழைக்கவுமில்லை. என்னை ஏறெடுத்துப் பார்க்கவும் இல்லை. காரணம் இன்று அவளோர் அடிமை. யாருக்குமல்ல நாணத்திற்கு.

அவள் சிரிப்பாள். அந்தச் சிரிப்பிலே இந்த உலகத்துத் தொல்லைகள் துயரங்கள் அனைத்திற்கும் ஒரு முடிவு காண்போம் என்று எண்ணிச் சென்ற என்னை ஏமாற்றம் இடியெனத் தாக்கியது அந்தத் துக்கத்தில் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். ஊருக்குப் புறப்படலாம் என்ற எண்ணத்தில்.

ஏமாற்றமெனும் இடிக்குப் பிறகு என் காதில் இன்ப மழை பொழிந்தது. அவளுடைய தோழி ஒருத்தி வந்திருந்தாள். அவளிடம் சொல்வதுபோல் எனக்கு அவளோர் சேதி சொன்னாள். "ஊர். ஊரையடுத்ததோர் பொய்கை. அந்தப் பொய்கையை அடுத்ததோர் கானாறு! அங்கே கூந்தலுக்கு எருமண் எடுக்க நான் வருவேன்! நீயும் வருவையோ!" என்று தன் தோழியிடம் கேட்ட அவள் என்னைக் கடையால் நோக்கி இடையாலும் இதழோடும் இளநகையாலும் கொன்றாள். சொன்னமொழி எனக்கென்று உணர்ந்தேன். புதிய உணர்வோடு புறப்பட்டேன் பொய்கைக்கு.

பொய்கையைக் கடந்தேன். ஆங்கோர் நீரோடை. நீரோடைகள் நாட்டில் பலவுண்டு. நீயும் நானும் கண்டிருக்கின்றோம். களித்திருக்கின்றோம். ஆனால், நான் கண்ட நீரோடை! என் செய்வேன். எழுதும் ஆற்றல் எனக்கில்லையே.

பாரி மலையின் பரப்பளவைக் கூற வந்த கவிஞன். "வான் கண்ணற்றே அவனது மலையே" என்றான். வானெனப் பரந்த மலைகளில் பொங்கி எழுகின்ற நீருற்றுகளைக் கூறவந்த அவன் "வானத்து மீன் கண்ணற்றே அவனது சுனையே!" என்று அழகுபடப் புனைந்தான். அந்த நீரோடைகளில் ஒன்றுதான் நான்கண்ட நீரோடை! 'கோடை நீடினும் தன்னிலை திரியாத் தண்டமிழ்ப்பாவையென' காவிரியின் வளத்தினைப் பாடினான் ஒரு கவிஞன். நான் கண்ட நீரோடையும் வளத்தில் காவிரியை ஒப்பானதே. அளவில் மட்டும் காவிரி பெரிது. நீரோடை சிறிது. அவ்வளவுதான்.

நீரோடையின் இருமருங்கும் நின்றிலங்கும் பூங்கொடியும் கனிமரமும் கண்படைத்த பயனதனைக் காண்பதுதான் எனச் சொல்லும்.

புனைந்த தேரோ என எண்ணத் தோன்றும் பூமலர்ந்த புன்னையும் குளிர் தென்றல் வழங்கவன்றோ நானுள்ளேன் என்பதுபோல் காற்றில் அசையும் புன்னையின் அடியில் உதிர்ந்து கிடக்கும் புன்னை மொட்டு

அண்ணாவின் போர்ப்படையில் புதியதோர் படைக்கலன்!

"விஸ்டம்"

(Voice Of Wisdom)

ஆங்கில வார ஏடு

ஆசிரியர்: **தென்னவன்,** B. E. (Hons)

16 பக்கங்களுடன் வெளிவருகிறது.

நாடெங்கும் விற்பனையாளர்கள் தேவை.

விவரங்கட்கு:-

உ. கணபதி, M. A.

சென்னை-6.

கள் அத்தனையும் முத்தானால் அகிலத்தில் நாம்தானே செல்வத்தில் சிறந்திருப்போம் என்று எண்ணத் தோன்றும்.

வளைந்தாடும் கொடிகளிலே வாய்விட்டுச் சிரிக்கும் மலர்கள் வருக வருகவென வரவேற்பு நல்கி நல்ல மணம் பரப்பும்.

கட்டிவைத்த படகோ என எண்ணத்தோன்றும் — மொட்டவிழ்த்த தாமரைகள் நீரோடை கரையருகே நின்றிருக்கும். கூட்டம் கூட்டமாக மிதந்துவரும் மலர்களின் மாட்சி கொட்டிவைத்த மலர்மலையோஎன்று எண்ணத்தோன்றும்அழகிய காட்சி.

குலைகள் தலைகொண்டு வான் முட்ட வளர்ந்திருக்கும் தென்னையும் கமுகும்; தேன் சொட்டும் கனி கொண்டு தரைமுட்டத் தாழ்ந்திருக்கும் குலைகொண்ட வாழையும்; கன்னியரின் கன்னமெனக் கனி கொண்ட மாவும் பார்த்தே பசியாறச் செய்யும்.

இந்த இயற்கையில் எனைமறந்தேன். பச்சைப்பட்டு விரித்ததோ எனப் பரந்த புல்வெளியில் சாய்ந்தேன். பனையைப் பிளந்து நீரோடைக்குப் பாலமாக அமைத்திருந்தனர். நெற்கட்டைச் சுமந்துகொண்டு கோடென இடையுடைய கோதையர் இடை வளைய வளைய அந்தப் பாலத்தில் நடைபயின்றனர். நெடுநேர அமைதிக்குப்பின், என் செவிகளில் இன்ப இசை ஒலி கேட்டது. இசை வந்த திசைநோக்கினேன். அங்கே என் சிட்டு வயல்வெளியில் பறந்து பறந்து ஓடி ஆடிப் பாடிக் கொண்டிருந்தது.

உள்ளத்தில் ஓர் கிளர்ச்சி! அது புரட்சிக்குத் தூபமிட்டது. தவழும் தென்றலில் கமழும் மணம் என் உடலைப் புல்லரித்தது. அவள் நின்ற திக்கிலே நோக்கினேன். வாருங்கள், வந்து பாருங்கள் வனிதையின் வடிவழகை என்பதுபோல் தென்னங்கீற்றுகள் காற்றில் அசைந்து அழைத்தன. வளைந்தாடும் மலர்க்கொடியில் வாய்விட்டுச் சிரிக்கும் மலர்கள் வாவென்று கண்சிமிட்டும்.

போ! போ! என்றது ஆசை. தனியள் அவள் போகாதே நில்! நில்! என்றது பண்பு. ஆசையும் பண்பும் இதய ஆழியில் பெருவலிகொண்டு மோதியது. தனியள் அவள் போகாதே நில்லென்ற பண்பை நோக்கி மெள்ளச்சிரித்த ஆசை.... தனிமைதானே காதலை வெளியிட வேண்டிய நேரம் என்று சொல்லிப் பண்பின் வலிவான வாதங்கள் அனைத்தையும் முறியடித்தது. ஆசைக்கு வழிவிட்டது பண்பு. ஆசைக்குத்துணை போவதுபோல் மழையும் ஆரம்பமானது. அருகுள்ள குடிசை ஒன்றுக்கு நானும் ஓடினேன். அவளும் வந்தாள். எந்த முகத்தைக் காணவேண்டுமென்று துடியாய்த் துடித்தேனோ அந்தமுகம் அருகில்! எதிரில்! அவளும் பேசவில்லை! நானும் பேசவில்லை. வெற்றிக்கு அச்சாரமாகத் தோல்வியை முன்வைத்து நானே முதலில் பேச ஆரம்பித்தேன். அவளை அறியாதான்போல்...........நீரோடையைப் பார்த்தவாறு,

பெயர் யாதோ என்றேன்.

பூங்கோதை என்றாள்.

நீரோடையின் பெயர்தானே என்றேன்.

ஆம், அதுதானே கேட்டீர் என்றாள்.

உன் பெயர்தான் சொல்லேன் என்றேன்.

அதுவும் அதுதான் என்றாள்.

குறும்பு மிகவுண்டோ என்றேன்!

குரங்கிடம் போய்ப்பாரும் என்றாள்.

வாய்ப்பேச்சு நின்றது. கண் பேச்சுத் தொடங்கியது. கண்களும் வாயும் பெற்ற வாய்ப்பு எனக்கில்லையே என்று கைகள் ஊடின. கைகளே உங்களுக்கும் வாய்ப்புத் தருகின்றேன் எனச் சொல்லி அவள் காணாத நேரத்தில் கன்னியவள் கையைப் பிடித்தேன். கயலென என் கை நழுவிக் கன்னத்தில் அறையொன்றையும் கொடுத்துவிட்டுக் கடுகி நடந்தாள் கடுங்கோபம்கொண்டு.

அவள் கைதந்த பரிசு கன்னத்தில் நோவெடுக்கும். நெஞ்சத்தில் தேன் ஊற்றெடுக்கும். என் கன்னத்தில் பதிந்திருந்த அவளது கை விரல்களைத் தடவிப்பார்த்து மகிழ்ந்தேன். கண்மூடிக்களித்தேன்.

கண் திறந்தேன். கன்னியவள் பனைப்பாலத்தில் நடந்துகொண்டிருந்தாள். நில்லென்று குரல்கொடுத்தேன். குரல்கேட்ட அவள் திரும்பி என்னைப் பார்த்தவாறு நடந்து கொண்டிருந்தாள். கால் இடறி நீரோடையில் வீழ்ந்தாள். பதறி ஓடினேன். என் உதவிவேண்டாம் என்பாள்போல் நீரோடையை எதிர்த்துத் தானே நீந்த முயன்றாள், முடியாமல் தவித்தாள். பின்னர் நீருள் குதித்து நீந்தியோடி அள்ளிக் கொண்டு கரைசேர்ந்தேன். கரையை அடைந்த பின்னரும் அந்த இளந்தளிரை என் தோள் நின்றும் இறக்காமல் நின்றேன். அவளும் இறங்குவதற்கு முயற்சி ஏதும் செய்தாளில்லை. சற்றுமுன் தொட்டேன் துடித்தாள். பிடித்தேன் அடித்தாள். அவளை இப்படிச் செயலற்றவளாக்கி என் தோளில் துவள வைத்த நீரோடையை எண்ணினேன் நெஞ்சில் நன்றியுணர்வு பொங்கியது.

பின்பு அவளைத் தோள்விட்டு இறக்கினேன்.நாணத்தின்உருவாகித் தாள்பார்த்துத் தரைகீறி நின்றாள். சங்கத் தமிழ் புலவன் ஒருவன் இந்த ஓவியம் படைத்த காவியத்தைக் கண்டிருந்தால் சிந்தாமல் சிதறாமல் சீர்பெற எழுதியிருப்பான் ஓர் காவியத்தை. அவளை ஓர் இலக்கியத்துத் தலைவியாக்கி இன்பத்தின் எல்லையிலே நின்றிருப்பான். பா வடிக்க இயலாத நிலை எனக்கு. ஆற்றலில்லாப் புழுப்போல் அவள் அருகில் நான் நின்றிருந்த நிலையை நினைத்தாலே எனக்கு வேதனையாக இருக்கிறது.

உழவர்கள் பலருடைய வாழ்வில் வளம் கொழிக்கச் செய்த நீரோடை என் வாழ்விலும் புதுப்பாதை காட்டியது. வாழ்விலே வளம் தந்த நீரோடை நீ வாழி. நீரோடை நீ வாழி! நீரோடை நீ வாழி! என்று பேரொலி செய்து வாழ்த்தினேன். அந்தப் பண்பு மகளோ பார்மகளைப் பார்த்துத் தலைகவிழ்த்து நின்றாள்.

சற்றுமுன் தொட்டேன் துள்ளினாள். துடித்தாள். பிடித்தேன் அடித்தாள். இப்பொழுதோ தொடுகின்றேன் குழைகின்றாள். தூக்குகிறேன் துவள்கின்றாள். தொட்டால் குழையவும், தூக்கினால் துவளவும் செய்த பெருமை உன் பெருமையன்றோ! தொடவைத்தாய், தூக்கவைத்தாய் நீரோடை நீ வாழி! நீரோடை நீ வாழி என்று மீண்டும் மீண்டும் வாழ்த்தி விட்டுக் கொடியணைத்துச் சென்றேன் வீட்டிற்கு.

அந்த அந்திப்பொழுது மீண்டும் வந்ததோ என்று கேட்காதே. இரவில்லை! காலையில்லை! பகலுமில்லை!

எந்த நேரமும் அந்தி நேரம்தான். அக நானூற்றுக் காட்சிதான். ஒவ்வொரு நாளும் ஆயிரமாயிரம் அகநானூற்றுக் காட்சிகள் தோன்றும் எங்கள் வாழ்வில். ஊடலும் கூடலும் புதுப் புதுப் பாடலுக்கும் ஆடலுக்கும் அடுத்தடுத்த நிகழ்ச்சிகள்.

மீண்டும் நீரோடை நிகழ்ச்சி நிகழ்ந்ததோ என்று கேட்கிறாயா? நிகழாமல் போகுமா? இன்பத்தை நினைத்தால் அவளை இழுத்தோடி நீரோடை தள்ளுவதும், நீந்தியோடி அள்ளுவதும்; கைவிட்டு நீருள்ளே மூழ்குவதும்; மூழ்கிவந்து நீருள்ளே கிள்ளுவதும்; துள்ளித் துடிக்கின்ற அவளை மீண்டும் அள்ளுவதும் அள்ளி அணைப்பதுவும்.........அப்பப்பா எழுதிக் காட்டவா முடியும். நெஞ்சத்தில் நினைத்துவிட்டால் கொஞ்சமா இன்பம்! கொள்ளையடா கொள்ளை!!

அள்ளுகின்ற போதும் அணைக்கின்ற போதும் அவள் சிரிப்பாள். அழகு நிலவன்ன அவள் முகமும் சிரிக்கும். முத்தனைய பற்களும் சிரிக்கும். வானத்து மீனோ என்னும் கண்ணும் சிரிக்கும்; வானத்து வில்லனைய புருவமும் சிரிக்கும்; வையத்துப் பிறை என்னும் வாள் விழியாள் நெற்றியும் சிரிக்கும். அந்தச் சிரிப்பில் என்னையே மறந்து வாழ்கிறேன்.

மாலை நேரம். மங்கையர் கண்களில் மையல் விளையாடும் நேரம். சோலை அழைக்கிறது. இதோ அவளும் வந்துவிட்டாள். வாங்கிப் படிக்கிருள் மடலை. படித்துவிட்டுப் பார்க்கிருள் என்னை. அந்தப் பார்வை அகத்துள்ளே சொல்லளவும் சொன்னீர்கள். இனி எள்ளளவும் சொல்லாதீர். அகத்துள்ளும் அகம் சொல்லல் அறமன்று என்கிருள். எனக்கும் மனமின்று. நீயும் அறிவாய், அது அறமுடைமை ஆகாது என்று. எனவே இத்துடன் முடித்தலே நன்று.

கோடிட்டுக் காட்டினேன். வண்ணம் தீட்டி வடிவம் கூட்டுவதிலே தான் வல்லவனுயிற்றே நீ! எழுத முடியாததை எண்ணிப் பார்த்துக் கொள். இனியும் வளரும் காவியம். தொடரும் மடலாக. வணக்கம்.

இப்படிக்கு,
உனது அன்பு நண்பன்.

தலைவி ஒரே ஒரு வேண்டுகோள்.

என்னடி அந்த வேண்டுகோள்.

மீண்டும் ஒருமுறை படிக்க வாய்ப்புக் கொடுங்களேன்.

அவர் எழுந்து வந்து விடுவாரேடி! வந்தால் மட்டும் உன்னை என்ன சொல்லிவிடப் போகிருர். உன்னைக் கடிந்துகொள்ளும் துணிவு எங்கே இருக்கப்போகிறது அவருக்கு!

சரி சரி! வா வா அந்தப் பூங்கொடியின் அடியிருந்து படிப்போம்.

இருவரும் பூங்கொடியின் அடியிருந்து படித்துக்கொண்டேயிருக்கிருர்கள். ஆனுல் அது நம் காதில் விழவில்லை. இதோ கண்ணில் தெரிகிறது. நெஞ்சில் நிறைகிறது. இதைத்தான் அவர்கள் எழுதிப் படிக்கிருர்கள். உண்மை உருவம் நம் கையில் இருக்கிறது. நகல் தான் அவர்கள் கையில்.

"ஊர்க்கும் அணித்தே பொய்கை
பொய்கைக்கும்
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே
இரைதேர் வெண்குருகல்ல தியாவதும்
துன்னல் போகின்ருர் பொழிலே
யாமெம்
கூழைக் கெருமண் கொணர்க சேறும்
ஆண்டும் வருவள் பெரும் பேதையே!"

—குறுந்தொகை.

O

பேரிழப்பு

தண்டனைத் தழும்பேற்றுச் சிறையில் இருக்கும்போதே நோய்வாய்ப்பட்டு எதிர்பாராதவிதமாக இயற்கை எய்திவிட்டார் நமது **கோ. சு. மணி** அவர்கள்.

அரசாங்கத்தின் அடக்குமுறைக்குப் பலியான நமது நண்பரின் மறைவு குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சிறப்பாக அவரது குடும்பத்துக்கும் ஒரு பேரிழப்பாகும்.

அரும்பு மீசையும், கட்டுடலும், கடமையுணர்ச்சியும், கண்ணியப் பண்பும், கட்டுப்பாட்டு உரமும் கொண்டு கடைசி வரை அயராது இயக்கப்பணி ஆற்றிவந்த நமது மணியின் மறைவு மேலும் நம்மையெல்லாம் மீளாத் துயரத்துக்கு ஆளாக்கி விட்டது.

மணி என்ற பெயருக்கு ஏற்ப அவரது உழைப்பும் குணமும் **மணி**யாகவே இருந்து நம்மையெல்லாம் மகிழவைத்தது.

மணியின் மறைவால் ஏற்பட்ட துக்கத்தை நம்மாலேயே தாங்கிக்கொள்ள முடியவில்லை என்றால், அவரது மனைவி மங்கள இலட்சுமியும், ஒரே புதல்வனுன குணசீலனும் எந்தளவுக்குத் துயரத்தில் ஆழ்ந்திருப்பார்கள் என்பதை எண்ணும்போதே நம்மை அறியாமல் நம் கண்கள் நீரைக் கக்குகின்றன.

இதுபோலவே மதுரைச் சிறையில் மறைந்த கடமை வீரன் பொற்செழியனின் மறைவும் நமக்கெல்லாம் பேரிழப்பாகும்.

மறைந்த மாவீரர்களின் மறைவால் வருந்தும் அவர்களது உற்ருர் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் நமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்கி, அவர்களது துயரத்தில் நாமும் பங்கு கொள்வதைத், தவிர வேறென்ன செய்ய இயலும்!

வாழ்க அவர்கள் புகழ்! வளர்க அவர்கள் தொண்டு!

—ஆசிரியர்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

வது மனித நெறி. தவறும் ஒருவனைக் கொல்லும் அளவுக்கு மனப்பண்பு இடம் தந்ததா? என்ன கொடுமைகள் செய்தாலும் மன்னித்து விடுதல் சிறந்த பண்பாடும் நாகரீகமும் அல்லவா? அறிவான் அறிந்து செய்யும் செயலல்லவா! அறிவு நமக்கீயும் அமிர்தமான கட்டளை, பணிகள் இவைதானே நண்பா! நீ நன்கு எண்ணிப்பார்!'' அக்குரலின் வாக்கு.

"நண்பா! உன்னுடைய கருத்துக்கள் தெளிந்த நீர்போலத் தெரிகின்றன. எனது கடந்தகால வாழ்வை நீ அறிந்திருந்தால், எனது கடமை என்றுகூட எண்ணத் துணிவாய்."

"சரி. நீ செய்ததைக் கடமை மயமானது என்று கூறலாம். ஒருவேளை அவன் செய்ததும் கடமையின் பொருட்டாகவே இருந்தால்......"

"அவன் செய்தது கடமையின் பொருட்டாக இருந்தால்; கடமை என்ற வார்த்தைக்கு மாசு கற்பித்தவனாகிறான். அதன் இலக்கணத்தையும், அமைதியையும் கெடுத்தவனாகிறான். அது கடமையிலிருந்து ஒதுங்கியது"

"கடமை உயிரைவிடப் பெரிது!"

"பொதுநலம் பேசுவதாகக் கூறிச் சுயநலத்தின் அகக்கடையில் சுழன்று எவ்வளவு அக்கிரமும், அகங்காரமும் செய்ய முடியுமோ, அவையெல்லாம் செய்துவிட்டான். அவன் தன்னலத்துக்கு விருந்தானவர்கள் ஏராளம். இடுக்கண் வந்த போதெல்லாம் எவ்வழியாகட்டும் அதை இன்பமாகவே கருதி வாழ்ந்தவர்கள், இவன் செய்யும் பொருளற்ற செய்கைகளால் நொந்து நொய்யாகின்றனர். பொதுநலப் போர்வைக்குள் இருந்து பொல்லாங்கு செய்ய எண்ணும் இவனை யாரும் சந்தேகிக்கவில்லை. பொய் தான் இவன் தெய்வம். பொதுநலம் இவனது கல்விப் புத்தகத்தின் மேலுறை. சுயநலம் புத்தகத்தின் உட்தாட்கள்! ஆடம்பரம், ஆரவாரம், அலங்காரப் பாசாங்கு இவன் அன்றாடப் பாடம்! இவன் நல்ல கொள்கை உடையவன் அல்ல."

"நண்பா! அவன் செயல்கள் புரிகிறது. இருந்தாலும் நீ அவசரப்பட்டுவிட்டாய். அதன் பலன் அவன் கை வெட்டுண்டது. சமுதாயத்தில் கொடுமை புரிபவனைத் தண்டிக்கத் தக்க சட்டம் உண்டு."

"சட்டம் பொதுநலவாதிகளின் போக்கில் வளைந்து கொடுக்கிறது."

"அவர்கள் தவறு செய்தால் தண்டிக்கத் தயங்காது."

"ஒத்துக்கொள்கிறேன். சட்டத்திடம் சட்டவாதிகளே நம்பிக்கை கொள்வதில்லை."

"சட்டத்தைத் துறந்தவர்கள் கூறினால் பொருந்தலாம்."

"எனக்குச் சட்டத்திடம் நம்பிக்கை இல்லை."

"மதிகொண்ட மனிதருக்குத்தான் சட்டம். அவர்கள்தான் பகுத்தறிவாளர்கள். மனிதனாலே ஏற்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது தான் சட்டம். அதை மனிதனாகவே வேண்டாம் எனில் பொருளில்லை."

"நண்பா! சட்டம் இருட்டறையின் விளக்கு"

"சிலவேளை அப்படித்தான் தோன்றும். இதைக் கூறுபவர்கள் துறவிகள், ஞானிகள், மேதைகளாக இருந்தால், மதிப்புண்டு"

"ஏன், நான் கூறக்கூடாதா?"

"நீ மட்டிலும் எதையும் செய்து சுதந்திரமாக வாழ நினைப்பது தவறு. எப்படிப்பட்டவனும் சட்டத்தின்முன் பணிதல் நன்று—கருவில் உருவாகும் குழந்தைகூடச் சட்டத்தின் பிடிக்குள் இருப்பது போல."

"குழந்தைகள் அமைதி காணலாம். என்னைப்போன்றவர்கள் அமைதிபெற முடிவதில்லை—சட்டம் இருந்தும்—வாதம் இருந்தும்."

"தவறு நண்பா! உன் தவறுக்கு நீதான் காரணம்! சிந்தித்துப் பார்!"

"நான் எதிலும் தவறவில்லை. எனக்கு நான் நல்லவன்."

"உனக்கு நீ நல்லவனாக இரு. ஆனால் உன் எதிரில் இருப்பவனுக்கு நீ நல்லவனா?"

"எதிரி, என்றும் எதிரிதானே!"

"அவன்தான் முக்கிய நண்பன். அவனிடத்தில்தான் நிறையும் குறையும் காண்பாய். உன்னை நான் நோக்கும் விதம் வேறு. உன் எதிரிகள் பார்க்கும் விதம் வேறு. எந்த எதிரியும் நல்ல நண்பனே! அவனை உன் மனப்பண்பால் வென்றுவிட்டால், எதையும் வெல்லும் மனப்பக்குவம் அடைந்ததுபோல்தான்!"

"என் எதிரி ஓர் கோழைப்பயல். ஓர் முட்டாள். தன்னலவாதி."

"கோழைகள் தன்னலம் பேசுவது எப்படியோ?"

"அவன் செயல்கள் அனைத்தும் தன்னலத்துக்குத் தாளம் போடுகின்றன."

"முட்டாள் சிந்திப்பது குறைவு. எப்படித் தன்னலத்திறன் தெளிவானது?"

"முட்டாள் தன்னலக்குருடன். ஆழ்ந்த சிந்தனை கிடையாது. தான் என்று எண்ணுவானே தவிர, மற்றவரையும் சிந்தைகொள்ளான். தன்னைப்போலவே பிறரையும் எண்ணித், தன் செய்கைக்குத் திரி இட்டு இட்டுத் தீமை பெருக்குவான். தன்னலத்தின் மீது வழி நடப்பான்."

"நண்பா! உன் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் நீ அவனைச் சுட்டிக்காட்டும் பெயர் பொதுநலவாதி என்றல்லவா?"

"ஆம்; கழுதைக்குப் பெயர் முத்துமாலையாம் அவன் பெயர் சமுதாயம். அவன் செய்பவை, சமுதாயத் துரோகச்செயல் புரியும் பழி, சமுதாய முதுகெலும்பான எங்கள் மீது. அதற்குப் பெயர்தான் பொதுநலம்! நச்சுக் கிருமி அவன். அவனைக் கொன்று துண்டு துண்டாக வெட்டி இறைக்காமல் போனேனே." உணர்ச்சி உந்த உறுமினான்.

"உனக்கு உணர்ச்சிவயப்படும் நலிவு இருக்குதே, அது மிகுந்த கெடுதல் நண்பா!"

"கொடுமைகள் தீவிரமாக நிகழ்ந்தால், சாதாரண மனிதன் உணர்ச்சிக்கு ஆளாவான். என்னைப் பொறுத்தவரை எவ்வளவோ உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தினேன். ஆனாலும் சில வேளைகளில் என்னால் முடிவதில்லை."

"உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் கைவரவேண்டும். இன்றைய நிலைமையில் நீ சமுதாயச் சட்டத்தின் அடிப்படையில் குற்றவாளியாகிறாய். நீதியின் முன் தவறை உணர்ந்துகொள்ளும் காலம் வருகிறது. இதிலிருந்து தப்பமுடியாது, நீ..."

"நண்பா! நான் தப்பித்துச்செல்ல விரும்பவில்லை. எந்தச் சட்டமாவது உண்மைக்குத் திரைபோட்டால், அதன் தேவை அனுவசியமானது. உண்மை வாழவேண்டும். அதுதான் என் அடிப்படைக் கொள்கை. நீதியின் முறைப்படி எனக்குத் தண்டனை தந்தால் ஏற்றுக்கொள்ளத் தயங்கேன். ஆனால், என் எதிரி போன்றவர்கள், சட்டத்தை நீதியை அவமதிக்கிறார்கள்."

"நண்பா இனி, நீ திருந்திவிடுவாய்" அக்குரல் பேசியது.

"என்னைச் சட்டம் திருத்துமா? திருத்தாதா? என்பது வேறு. சமுதாயம் திருந்தினுல் அத்துடன் நானும் திருந்துவேன். இல்லையெனில் என் பொதுநலத்தொண்டு நீடிக்கும். அதன் மூலம் தீமைக்கும், தீமையாளருக்கும் எதுவும் நிகழலாம்"

"பொதுநலத்தின் பேரில் நீயும் கெடுதல் விளைவிப்பாயா?"

"நண்பா! நல்லவன் ஒருவன் எதிர்பாராதபடி சட்டத்தின்மூலம் தண்டிக்கப்படும்போது, அவனுக்கு உலகம் சூன்யம் நிறைந்ததாய் காணப்படுகிறது. உலகையும் சட்டத்தையும் வெறித்துப் பார்க்கிருன். அவன் அன்ருடச் சிந்தனையில் முற்றுப்பெருத ஒன்று நிழலாடுகிறது. அது புதிராகவும்திகழ்கின்றது. தீயவனைத் தண்டிப்பதும், நல்லவனைத் தட்டிக்கொடுத்துப் போற்றுவதும் மரபு"

"நண்பா! எப்பொழுதும் நல்லவன் மன அமைதியிழத்தல் கூடாது. சட்டத்தின் பாடத்தை சாதாரண நிகழ்ச்சியாகவே கருதவேண்டும். எத்தனையோவிதமான அல்லலை ஏற்படுத்திக்கொடுப்பதும், ஏற்படுவதும் தான் வாழ்வு. துன்பமெலாம் துன்பமில்லை. இன்பமெலாம் இன்பமன்று. துன்பம் நேருகையில் இன்பத்தின் வழிக்குப் பாதை தடுமாறிப் போகிருேம் என எண்ணவேண்டும்"

"நீ சொல்வது சரி. சட்டம் பொதுவானது. தீயவனுகவும், நல்லவனுகவும் ஒருவன் இருப்பது அவன் மனப்பாங்கின்படிதானே! தாமே மனிதர்கள் திருந்தவேண்டும். அதுதான் தொல்லையிலா ஒன்று."

"பரவாயில்லை. மனிதன் நினைத்தால் இன்பம் உண்டு. இதயத்தை நன்ருகத் திறந்து காட்டு. அகத்தில் அன்பைப் பெருக்கியே வாழ்க! உன் எண்ணம், செயல் இவற்றில் பிறர் பிழை காணலாம். அதற்காக நீ கவலைப்படாதே! உன்னைத் தூற்றித் திரியலாம். உன் கொள்கைகளை அவமதிக்கலாம். வீண் துயர் கொள்ளாதே! மற்றவர் மீதும் அவர்கள் கொள்கை மீதும் வெறுப்புக் காட்டாதே! உன்னை நீ நம்பி வாழ். பிறர் உன்னை நம்பினுலும் நம்பாவிட்டாலும் கவலைப்படாதே! கவலைப்பட்டாய் என்ருல், அதுதான் உனக்குப் படுகுழி!"

"நண்பா! என்னை நான் அறியத்தான் கொள்கைகளையும் நன்மைகளையும் தேடிக்கொண்டிருக்கிறேன்"

"நல்ல கொள்கையும், நன்மையும் அடைதலில் மட்டும் உன்னை நீ அறியத் துணை செய்யாது. துன்பமும், துயரத் தேர்வும், இன்னலும், பிற இடர்களும், அடைந்த பயிற்சி வேண்டும்."

"என் வாழ்வில் நான் அடையாத துன்பத்தை இப்பொழுது அடைந்திருக்கிறேன்."

"எது உன் துன்பம்! சமுதாயத்தின் கைகளை ஒடிக்கத் தகுதியான காரணங்களா?"

"ஆம்!"

"என்ன அது? கூற முடியுமா..."

"உன்னிடமின்றி வேறு யாரிடம் நான் கூறுவேன்! நண்பா இந்தக் கிராமம் உழவர் குலம் நிறைந்தது. பயிர்த்தொழிலை உயிரினும் மேலாகக் கருதி அதில் மேன்மையடைந்து வருகிருர்கள். அதே நேரத்தில் ஊரில் படித்தவர் தொகை மிகக் குறைவு. அதிலும், உரைப்பதுபோல் சிந்திக்கத் தெரிந்தவர் தொகை குறைவு. சில பணக்காரர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைத்திருக்கிருர்கள். அவர்களால் எவ்விதமான பலனும் அற்றவர்கள். ஊரிலே சில காலிகள் உண்டு.

அவர்கள் தொழில் குடிப்பது, கூத்தாடுவது, ஏழைகளை வாட்டுவது, இழிவான பேச்சுக்கள் பேசுவது. சாதி வெறியும் இணைந்து கொள்ளும். அவர்களின் ஆடை வசதிகள் அலாதியானது. அப்படிப்பட்ட முரடர்களைப் பார்த்து அரசாங்க அதிகாரிகளும் பயப்படுகிருர்கள். இதெல்லாம் எனக்கு வேதனை நிறைந்ததாத இருக்கிறது. இத்துடன் அவர்கள் செயல் நின்றுவிடவில்லை. பெண்களை அலட்சியப் பார்வை பார்ப்பதும், கேலியும் கிண்டலும் நிரம்பிய பேச்சுக்கள் பேசுவதும் குடித்துவிட்டுக் கலாட்டா செய்வதும், தெருக்களில் நின்றுகொண்டு உளறுவதும், சண்டை பிடிப்பதும் அன்ருடத் தொழிலாக இருக்கின்றன. இதற்கெல்லாம் நான் வருத்தப்படவில்லை. அவன் குடிக்கிருன், கூத்தாடுகிருன் என்ருல் குடித்த அவனைத்தான் காவலர்கள் கைது செய்யவேண்டும. தண்டிக்க வேண்டும். அது கிடையாது. காவல் அதிகாரியாக வருகிறவர்கள், எவன் அயோக்கியனே அவனைத்தான் அணுகுகிருர்கள். அவன் பாமர மக்களைக் காட்டிக் கொடுக்கிருன். கிராம முதல்வன்கூட அந்தவிதமாகத்தான் நடக்கிருன், ரௌடி எது நினைக்கின்ருனே, அது தான் செயலாகிறது. எனது தந்தையை ஒருமுறை காட்டிக் கொடுத்தான். அதற்குக்கூட நான் கவலைப்படவில்லை. ஆனுல் நேற்றைய தினம் ஒன்றுமறியாத ஓர் விவசாயக் கூலிப் பெண்ணை, சாராயத்தைக் காட்டிப் போலீசிடம் ஒப்படைத்தான்! அதைக் கண்ட என் கண்கள் குளமாகின. அந்தப் பெண்ணின் நிலையை நீ மட்டும் பார்த்தால் அப்படியே அதிர்ந்து போவாய்; அவன் பொருளற்ற செயல் என்னைத் தின்றது......"

[குறுக்கிட்டது அக்குரல்]

"ஏனே அப்பெண் காட்டிக் கொடுக்கப்பட்டாள்?"

"அவனுக்கு மனச்சாட்சி இருந்தால் அதனிடம் போய்த்தான் கேட்கணும்"

"மனச்சாட்சியைக் கொன்றவனே!"

"இல்லை. மனச்சாட்சியின் சுதந்தரத்தைப் பறித்தவன். சுயநலம் அவன் கண்களை மூடிவிட்டது. இருளில் உலாவும் அவன் இன்ப ஒளியில் உலாவுவதாக எண்ணிக்கொண்டிருக்கிருன். ஆனுல், ஊர் 'அவள் அவனுக்கு இசைய மறுத்தாளாம்' இப்படிப் பேசுகிறது. கொடுமைப் புயலைக் கவனி! இப்போது சொல் நான் செய்தது தவரு.........?"

"அவன் திருந்துவான்"

"எப்படித் திருந்துவான். இப்படி ஏதேனும் செய்தால்தானே திருந்த ஓர் வாய்ப்பு" அவன் சொன்னுன்.

"உன்னையே நீ எண்ணிப்பார்! அப்பொழுது தெரியும் ஒளி! ஏதோ ஒருவித மயக்கத்தில் அவன் தீமை செய்கிருன்."

"இவ்வளவு பரிந்து பேசும் நீ யாரோ?" அவன் கேட்டான்!

"என்னை நீ அறியவேண்டுமா? உன்னையே நீ எண்ணிப்பார்" அக்குரல்மொழி! சுற்றும் புறமும் அவன் பார்த்தான். அங்கு யாருமே இல்லை. அவன் ஒருவனே இருந்தான். அவன் மனம்தான் அவனுடன் பேசியது. யாரோ பேசுவதாக அவன் பிரமையில் இருந்தான். 'உன்னையே நீஎண்ணிப்பார்' எனக் கூறிக்கொண்டே வெறிபிடித்தவனுக ஓடிக்கொண்டிருந்தான்!

✱

தியாகத்தீ தொடரட்டும்...!

[அறவாழி]

பிறக்கின்றோம்; வாழ்ந்து இறக்கின்றோம். இடைப்பட்ட வாழ்நாளில் பெரும்புகழுடம்பு எய்தினவர் எத்தனை பேர் நம்மில்? பசித்தால் புசித்து, வியர்த்தால் குளித்து, நிழல் கண்ட இடங்களிலே படுத்துறங்கி விட்டால் போதுமென்ற மனதோடு தான் ஆயிரமாயிரவரின் எண்ணமும், வாழ்வும் சுழன்றோடிக்கொண்டிருக்கின்றன. இவ்வாறேதான், கானகத்து விலங்கினங்களும் வாழ்வு நடாத்துகின்றன. ஆகவே, நாம் விலங்கினத்திற்கும் மனித இனத்திற்கும் மிக்கதொரு வேற்றுமையையும், மறுமலர்ச்சியையும் காணவேண்டாமா?

ஆம்... அவசியம் வேற்றுமையையும், விழிப்புணர்ச்சியையும் காணத்தான் வேண்டும்! மக்களிடையே மண்டிக்கிடந்த மடைமைச் செயல்களையும்-மமதைப் போதை குடித்துப் பித்து மனம் கொண்டோரின் அட்டூழியங்களையும் — அவர்கள் பஞ்சை மக்களைச் சித்தரவதை செய்து நாட்டைக் காடாக்கிக் காட்டுத் தர்பார் நடத்திக்கொண்டுவந்த மிருகச் செயல்களையும் — எதிர்த்து நின்று தியாகத் தீயில் குளித்து— முயற்சியின் திருவினையால் மறுமலர்ச்சியையும், மக்களாட்சியையும் நிறுவி — உன்னத வேற்றுமையை—விடுதலையை விதைத்துச் சென்ற செம்மல்களை—அறிஞர்களை நாம் வரலாறுகளிலே காணுகின்றோம்; கண்டு; புகழுடம் பெய்திய அக்குணக்குன்றுகளிடமிருந்து தொடர்ந்து வரும் தியாகத்தீயில் விழுந்து வெந்து மடிந்து 'குறைந்த வாழ்நாளிலாவது நிறைந்த புகழைத் தேடிக் கொண்டுவிடுவோம்' என்ற தணியா வேட்கையுறுகின்றோம்.

உலகை உய்விக்க உதித்த உத்தமராம் இயேசுபிரான் ஐந்து மாபெருங் காயங்களோடு சிலுவையிலே அறையுண்டு கொல்லப்பட்டார்! நபிகள் நாயகம் கல்லால்அடியுற்று, கசிந்து வந்த இரத்தத் துளிகளை வழித்தெறிந்துக்கொண்டு மதீனாவுக்குத் துரத்தப்பட்டார்! "ஏதென்சு நகரத்து என் அருமைச் செல்வங்களே! இந்நாட்டுத் தங்கங்களே! ஓடிவாருங்கள், இதோ! நான் தரும் அறிவு மருந்து! இதை உங்கள் குருட்டுக் கண்களிலே தடவிக்கொண்டு விழிமின்–எழுமின் — கண்முன் தென்படும் காட்டுமிராண்டித் தனங்களை கசையடி கொடுத்து ஒழிமின்" என்று அறிவுக்கண் வழங்கினவர் சிரித்துக் கொண்டே நஞ்சைக் குடித்தார்.

நயத்தக்க நாகரிகம் வேண்டி பெயக் கண்டும் நஞ்சுண்டமைந்த இம்மாமேதைகளின் தியாக வாழ்வினை நாமெல்லாம் நினைவு கூர்கையில், நெஞ்சமெலாம் நெக்குருகுகின்றது; மெய்யெலாம் சிலிர்க்கின்றது; இரத்த நாளங்களெல்லாம் சூடேறி முறுக்கேறுகின்றன.

தோன்றுங்கால் புகழொடு தோன்றிய இப்புனிதவான்கள்தான் நமது கண்கண்ட தெய்வங்கள் ஆவார்கள் என்பதில் ஐயமுண்டோ? என்பு தோல் அனைத்தையும் பிறர்க்குரித் தாக்கிவிட்ட இப்பெருந்தகைகளைப் பற்றி, அவர்களின் வலிவும், பொலிவும் வாய்ந்த சீரிய தொண்டுகளைப் பற்றி இன்று நாமேன் நினைவு கொளல் வேண்டும்?

ஆம்! நாம் நினைவுகொள்ள வேண்டியவர்களாகத்தான் இருக்கின்றோம். ஏனெனில், நமது வீரத் திருநாட்டின் நிலை—பண்பாடு—நாகரிகம் அனைத்திற்குமே சோதனை காலம் வந்திருக்கிறது. நமது பண்டை இனப்பெருமையிழந்து— தந்தையர் நாடிழந்து—தனிப்பெருஞ் செம்மொழியின் சிறப்பிழந்து அனலிடைப் புழுவாய், அண்டை நாட்டானின் அதிகாரப் பிணைப்பில் ஒடுக்கப்பட்டு — கொடும்புலியின் கோரப்பசிக்கு இரையாகிவிடாது— மீள்வதற்கு வழிவகைகளை ஆய்ந்து தேடிக்கொண்டு முன்னேறும் வேளையிலே, இடையே முகிழ்க்கும் இடர்ப்பாடுகளை—தடியடிகளை-குண்டுகளை மார்பிலே ஏந்திக்கொள்ளவேண்டுமல்லவா! அதற்காகவேதான் நாம் வீரத் தியாகிகளாகிய ஆபிரகாமையும் — சன்-யாட்-சென்னையும் — கமால்பாட்சா போன்றோர்களையும், அவர்களின் இரத்தக்கறை படிந்த வாழ்க்கை வரலாறுகளையும் படித்து, மனத்திலிருத்திக்கொண்டு அவர்களின் வழி நடக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

நமது மாபெருங் கழகம், அடலேறாய்ச் செம்மாந்து பீடுநடை போடுவதைக்கண்டு — கழகத்தின் இதய அடித்தளத்திலிருந்து எழுகின்ற உணர்ச்சிக் குமுறல்களை— உள்ளத்தாற் பொய்யாது ஒழுகுகின்ற கடமை—கண்ணியம்—கட்டுப்பாடுகளை—கனமும்முரமாக முன்னேறிவரும் இவ்விருபதாம் நூற்றாண்டில், அறிவுப்பசி எடுத்துத்திரியும் வீராங்கனைகள், ஆன்றவிந்தடங்கிய பெரியார்கள், தாய்மார்கள் முதலியோர் கழகத்தின் உயிர்நாடிகளாகவும், அங்கத்தினர், ஆதரவாளர்களாகவும் சேர்ந்து இலட்சோபலட்சமாய் விடுதலைப் படைவரிசை பெருகுவதுகண்டு, நம்மை நசுக்கிவிட—ஒழித்துவிட—நாம் எடுத்துக்கொண்ட இலட்சியத்தை மாய்த்துவிட மறக்கச்செய்திட — திராவிட மறவர்குடி இடிமுழக்கங்களை அடக்கிவிட-ஒடுக்கிவிட நம்முன்னே நெடுமரங்களாய், நீள்பெருஞ்சுவர்களாய் நிற்கும் கிழவர்களும், கற்காலர்களும் கச்சனத்தை வரிந்து கட்டிக்கொண்டு, தண்டு முண்டாக வம்புக்கு வருகின்றார்கள். உருட்டியும், மிரட்டியும் பழிவாங்குகின்றார்கள்.

இதோ எங்கள் வீரத்திற்கோர் எடுத்துக்காட்டு! அது எதிரியின் பார்வைக்கோர் அழியாக்காட்சி!! நாகாவாவோருக்கு ஓர் வாய்ப்பூட்டு!!!

[போரில் புறமுதுகிட்டுத் தோற்றோடிய கனகனும், விசயனும், சேரன் செங்குட்டுவரின் குரல்வளைப் பிடியில் அகப்பட்டு உயிருக்கு இரக்கும் காட்சி......]

கனகன்:- (உடல்நடுங்கி) பேராண்மையின் விளைநிலமே! எங்கள் பால் இரக்கம்வைத்து மன்னித்து

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

விடுங்கள். குடிபோதையில் நிலை மாறி—குணமாறி தவறுதலாகக் கூறித் தமிழ் மண்ணைப் பழித்து விட்டோம். இனி இவ்வாறு கனவிலும் செய்யோம் பிரபு!

விசயன்:- வேந்தர் வேந்தே! எங்கள் புத்திக்கு இதுவும்வேண்டும், இன்னமும்வேண்டும். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வேலொடு முன்தோன்றி வீரம் விளைத்த இனத்தைப் பழித்துப் பாவத்தைத் தேடிக்கொண்ட குற்றத்திற்கு, இதோ! எங்கள் தலை மீது இருக்கும் இமயக்கல்லே... சரியானதோர் கழுவாய் ஆகும்.

செங்குட்டுவன்:- (சிரித்துவிட்டு) வட புலத்து விசயா! நீர் கூறினவை முக்காலும் உண்மையே. மலை மீது பட்டொளி வீசிடும் எமது இலச்சினைகள் வடக்குக்கு எடுத்துக்காட்டும் எங்களது வீரத்தை! புறப்படுங்கள்.

[மூச்சு விடுவதற்குள் மூண்டுவிட்ட அவமானத்தை மனதிற்கொண்டு "இனிச்சாக் காடே நமை மதிக்கும் பூக் காடு" என்றெண்ணித் தலை நோகத் தள்ளாடிக் கல்தூக்கிச் செல்கின்றனர்.]

இவ்வாறான வீர வரலாறுகளும், கடல்கடந்தும் சென்ற வீரமும் திருவிடத்தைச் சார்ந்த எங்களுக்கு மட்டும்தான் சொந்தமாகும். என்பதை உணர்ந்து ஒழுங்குபடவேண்டும். எங்கள் தலைமையின் கட்டளைக்கும், கட்டுப்பாட்டிற்கும் கட்டுண்டு, சிரம் தாழ்த்திச் செல்கின்ற கடமை வீரர்கட்கு—நல்லிளஞ் சிங்கங்கட்கு மாற்றவர் எச்சோதனையும் தந்து விடவேண்டாம்.

இனி நாம் திடம்பெறுவோமாக; துவளாது தோள் நிமிர்த்தித் தொண்டுபுரிவோமாக. நாம் விடும் மூச்சும், பேச்சும் ஒன்றைக் குறித்ததாகவே இருக்கட்டும். அது நம் தங்கத் திராவிடத்தை விடுதலை பெறப் பாதை வகுப்பதாக இருக்கட்டும். ஆனல் ஒன்று......! நமது தொண்டால் பெற்றுவரும் பெரும் புகழினையும்—மற்றும் குணக்கேடர்களால் மூண்டுவிடும் பெரும் இழப்புகளைக்கண்டும் அச்சமோ, அன்றி அகமகிழ்வோ எளிதில் உணர்ச்சி வசப்பட்டு அடைந்துவிடக்கூடாது. "எதையும் தாங்கும் இதயத்தோடு" நிமிர்ந்து நின்று பாடுபடுவோமாக.

கடந்த பதினன்கு ஆண்டுகளில் கழகக் காவலர்களாலும், கடமை வீரர்களாலும் நமது 'புனித பூமி' பெற்றிருக்கும் வானுர்ந்த புகழினையும், முன்னேற்றத்தையும் எங்ஙனம் நம்மால் இயம்புதற்கியலும்? இயலாதாயினும், ஈண்டு உயர்ந்த சில கருப்பொருளை மட்டும் காண்குவோம்.

"ஒரு நாட்டைக் கொலைபுரிய வேண்டுமானல் முதற்கண் அந்நாட்டு மொழியைக் கொன்று போடு" (If you want kill the nation, you first kill the language) என்பதைப்போல, நமது 'கன்னித் தமிழு'க்கு கடுமாபத்து வந்தகாலை, தாளமுத்து—நடராசன் போன்ற தியாக அடலேறுகள் பொங்கியெழுந்து தங்கள் இன்னுயிரை ஈந்து, மழலைச் செல்வங்களையும், மனைவியரையும் விட்டுப் பிரிந்து காப்பாற்றியிருக்கிருர்கள் என்ருல், இது நாளை வரலாற்றிலே பொறிக்கப்போகும் "பொன்னெழுத்துக் காவிய"மன்ருே? மற்றும் நம்மவர் நா அலர்வதும், ஏடுகள் பகர்வதும், கலை முழங்குவதும் — அவ்வளவும் தமிழ்! தமிழ்!! தமிழோசை அன்ருே!!

அறத்தையும், அறிவாற்றலையும் அணிகலன்களாகக் கொண்ட தமிழ் தன் கண்ணியமிக்க கோட்டைக்குள் புகுந்து விட்டாள்! அங்கே கால முழுதும் தூங்கிக் கிடந்தோர் நடுங்கிப்போய் எழுந்துவிட்டனர்!இதனல் எங்கும் சரியான, ஒழுங்கான, 'அரசியல் மறுமலர்ச்சி' உண்டாகியிருக்கிறது. இன்றைய அரசியல் விழிப்புணர்ச்சியை நாம்உள்ளுந்தொறும், உள்ளுந்தொறும் அந்தப் பெருமையெல்லாம் யாரைச் சேர்ந்தது? நாட்டிலே ஏற்பட்டுவரும் நல்ல அறிவுப் பலமும், நாகரிகமும், இனப்பெருமையும், பல்துறை முற்போக்கும் இன்று எவரால் உண்டாகிப் பெருக்கெடுத்து வருகின்றது? இவ்வினக்களுக்கெல்லாம் ஏற்புடைய விடையை, கருப்பொருளை நாம் கண்டிருக்கின்ருேம். அவை நமது கடமையும், தமிழ்மொழிக்கு அளிக்கும் அன்புக் காணிக்கையாகவும் மலர்கின்றது.

நம்மிடையே இருந்து புறப்படும் அறிவென்னும் வெடிகுண்டு வீச்சுக்களாலும், ஆக்கப் பணிகளாலும் ஆங்கே முகிழ்க்கும் தாமரை மொக்குகளைக் கொண்டு மாத்திரம் நாம் அகமகிழ்ந்து விடவோ, அன்றி இறும்பூதெய்திவிடவோ முடியாத நிலையிலிருக்கின்ருேம். ஏனெனில், நாம் இறங்கிவிட்ட கருமம், இழந்து வரும் உயிரைத் திரும்பப் பெறுவதற்கும், இரத்தவெறியெடுத்த வேங்கைவாய்ப்பட்ட அழகுமான், விடுதலைக்குப் பாடுபடுவதற்கும் ஒப்பாகும். மொக்கு முழுதும் மலர்ந்து முறுவலிக்கும் அந்த நன்நாளே நமது பொன்னுன திருநாளாகும். அதுவரை நாம் "காலம் கருதியிருப்பர் கலங்காது; ஞாலம் கருதுபவர்" என்ற வள்ளுவனரின் வாய்மொழிக்கு இலக்கியங்களாகத் திகழ்ந்து வரவேண்டும்.

நமது இலட்சியம் ஈடேறும் வரை நாம்—

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணுயினர்."

என்னும் நீதிநெறி விளக்கம் தந்த கருத்துரைகளுக்கிணங்க ஒழுகிக் காரியமாற்ற வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் நாணேற்றப்பட்ட வில்லினின்றும் விசையாக விடுபட்டுவிட்ட அம்புகள். குறி தவருது சென்று, கொண்ட இலட்சியத்திற்கு, திருஇடத்தின் விடுதலைக்குக் குந்தகம்விளைவிப்போரைக்கிழித்தெறிந்து, வெற்றி முரசு முழங்க 'வெற்றி மங்கையை' அணைக்க வேண்டும்.

○

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.